உ

ஸ்ரீவியாஸ பகவான் சம்ஸ்கிருதத்தில்

இயற்றிய

கூர்ம புராணத்துள்ள

ஈஸ்வர கீதை.

இஃது

இரும்பூதூர்

ஸ்ரீ தத்துவ ராய ஸ்வாமிகளால்

தமிழில் செய்யுள் வடிவமாக

மொழி பெயர்க்கப்பட்டு

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

ஸ்வாமிகள் அவர்களால்

சென்னை - திருவல்லிக் கேணி

நோபில் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

 1925 [விலை அணா 4.

ஈஸ்வர கீதை.

பாயிரம்.

பூத மைந்தோ டிரவிமதி புருட ஞகிப் புணர்ந்தென்றும், பேத மில்லா வறிவுருவாய்ப் பிறங்கு கின்ற பேரொளியோ, ஞதி மூவர்க் கறிவரியோ னரிவை பாக ஞமலன், பாத பங்க யங்கடலை வைத்தே பணியும் பரிசின ஞல். 1

இலங்கிய மறைக ளுன்கு மியம்புதற் கிய லா தென்ன, மலங்கிய சிந்தை யோடு வான வர் மூவர் நிற்க, விலங்கிய லனைய வென்னை வேதகஞ் செய்தென் னுள்ளே, துலங்கிய சொரூபா நந்தன் றுணையடி தொழுதல் செய் வாம். 2

முன்மதி யணிந்த செக்கர்ந்தன் மவுலி முதல் வனே யென்னமுன் னின்று, நன்மதி முநிவர்

கேட்பவன் போடு நல்கிய நான்மறைப் பொரு ளைப், புன்மதிச் சொலவும் பொருளுமொன் றுணரேன் போதகஞ் செயப்புகு மிதுகண், டென்மதி யெனக்கே நகைசெயு மானு லேதி லார்க் கென்செயா திதுவே. 3

சிவன்றிரு வுருவு கொண்டுமுன் பருளிச் செய்ததோர் புராணமா தலினுற், சிவன்றனை யளித்த பரன்றிரு நாமஞ் சிவப்பிர காசமா மதனுற், சிவந்தசெந் தமிழா வியார்க்குமிந் நிலத்தே சிவந்தனைத் திகழ்த்திடுந் தெளிவாற், சிவன்றனக் குரிய தாதலா னுமஞ் சிவப்பிர காசமென் றுரைப்பாம். 4

பாயிரம் முற்றிற்று

7-2

1. இருடிகள் வினவும் அத்தியாயம்.

பிரமரண் டங்கள் படைத்தவப், பரிசும் பெருமையு மநுக்களெல் லுலகளும், வரமுற வுரைத்தாய் வளம்பெற வதிலே வாய்மையால் வருணனான் கினினுந், தருமதற் பாராய் ஞானயோ கத்தே சாலவா தரிப்பவர் தம்மாற், றிரமுறப் பாவுந் தேவதே வர்க்குந் தேவனுண் டென்றுசெப் பினையால். 1

நாதனு யரிய நான்மறை தெரிந்து நன் னெறி யளிக்குநா ரணனு, மாதவ முநிபா லறிவெலா மறிந்தா யாதலா லரும்பரந் திகழ்த்தி, யேதமார் பிறவி யறுப்பதா ஞான மேதது வியம்புவா யென்று, சூதமா முநி யைச் சௌநகன் முதலாந் தொல்லைமா முநி வர்கள் சொன்னார். 2

சூத மாமுநி முநிவர்கள் சொன்னவா கேட் டுப், போத மாநெறி யளித்தன புராணனை

நினைவுற், ரேுது வானொருப் படவவன் றனக்குணர் வளித்த, நாத ஞகிய வியாதனு முறைவிட நடந்தான். 3

கார்முகில் போலு மேனி கமலமா மலர்போ லுங்கண், ணேர்மிகு முநியை யெல்லா முநி வரு மிறைஞ்சச் சூதன், பார்மிசைத் தெண் டம் பண்ணிப் பன்முறை வலமாய் வந்து. கூர்மிகு மன்பிற் சென்னி குவித்தகை யோடு நின்ருன். 4

அருந்தவத் தோர்க ளெல்லா மநாமய முரைத்த வர்க்குப், பொருந்துமா தநங்கற் பிக்கப் பூசுரர் முகங்க ணேக்கி, யிருந்தவங் கல்வி கேள்விக் கில்லையே யிடையூ றென்று, பெருந்தகை யுரைத்தான் சூதன் பின்னரும் வணங்கிச் சொல்வான். 5

இத்தபோ தநர்கள் சாந்தியா லறத்தா லிறந் தவ ரிறையியல் பறிவான், பத்தரா னவர்க ளேவலே செய்யும் பாவகம் பிறந்தன வெவர் க்கு, மத்தனு மரிபண் டாமையாய் முநிகட் கருளிய தேதெனக் களித்த, சுத்தஞா நத்தை

யிவர்களுக் கருளாற் சொல்லெனத் துணையடி
தொழுதான். 6

சொன்ன வாசகமு ளங்கொ ளாவிறைது
ணைப்ப தங்களைநி னைந்துதன், சென்னி
யாலுறவ ணங்கி விண்ணவர்க டேவ னும்
பரவு தேவனே,முன்னொர் நாண்மிகுச நற்கு
மாரன்முதன் முநிவர் கட்குலகின் மூலமாந்,
தன்னை யாரருளி ஞேதி ஞனினிது கேண்மி
னென்றுமுநி சாற்றினன். 7

தலைமைசேர் சநற்கு மாரன் சநந்தநன் சந
கன் வெள்ளி, யலைவிலா வுருத்தி ரன்று
னங்கிரா வாம தேவன், கலைதெரி பிருகு
யோகி கபிலனத் திரிக ணுதன், மலைவறு
வசிட்ட ஞேடு மரீசியா மதியின் மிக்கோர். 8

பரமன தருளா லன்றியே பரத்தைப் பரப்
புறப் பார்த்ததம் மதியா, லொருவரோ டொரு
வர் பன்னெடுங் கால முசாவியொன் றுணர்
வுறப் பெறுமல், வரமிகு பதரி வநமடைந்
தரிய மாதவம் வருந்தினர் வருந்த, நரனெடு

நாரா யணனொரு முநியாய் நற்றவர்க் கருள் செய நடந்தான். 9

நாரண னருளிற் பணிந்துமா முநிவர் நான்மறை மொழியினால் வழுத்தக், காரணந் தன்னை யறிந்துநீர் தபித்த காரண மென்னெனக் கண்ண, னோரணி மறையின் பொருடெரிந் திடுதற் கெங்களா லியன்றில திறைவா, வாரணப் பொருளை யறிகுவாய் நீயே யாதலா லுன்னையே யடைந்தோம். 10

ஏதுகா ரணமிவ் வுலகினுக் கெல்லா மென்றுநின் றளிப்பவ னெவன்றா, னேதுதா னுந்மா வேதுவீ டேவன் பிறப்பவ னெவன் பிறப் பிப்பா, னேதுமா ராலே கண்டிடப் படுவ திணையறு பிரமமே தெல்லா, மோதுவா யெங்க ளையநீ யல்லா லொழிப்பவ ரில்லை யென் றுரைத்தார். 11

அந்த வெல்லையி லம்புயை கேள்வனும்
வந்த தன்றவ வேடத்தை மாறியே
சிந்தை யாலிமை யோர்க்குந்தெ ரிக்கொணா
வெந்தை தன்னொளி யாலேயி லங்கினான். 12

திங்க ளுயிறு போலத்தி கழ்ந்தவெண்
சங்கு மாழியுந் தண்டஞ்சா ரங்கமுஞ்
செங்கை நான்குந் திருமறு மார்பமும்
பங்க யாலயப் பாவையுங் கூடவே. 13

சுட்ட பொன்னினுந் தூயொளி யாயொளி
விட்டி லங்கினன் விட்டுவி ளங்கொளி
மட்ட மன்றிய மண்டலத் தால்வெளிப்
பட்ட னன்னா னாய்வந்த பான்மையான். 14

அரியுருவு கண்டகம கிழ்ந்தவள விற்கே, பெரியபரி வோடுபிறை சூடியபி ரான்முன், சுருதிமுடி வோதுபொருள் சொல்லுத றணிந்தே, கருதவரி யான்முநிவர் கண்ணில் வெளி நின்றான். 15

செயசெய தேவர் போற்றுந் தேவமா தேவ போற்றி, யயமுற முநிவர் போற்று மம்பிகா பதியே போற்றி, நயமுறு மன்பா லன்றி நணு குதற் கரியாய் போற்றி, செயலற விருந்த யோகிற் றிகழ்ந்திடுஞ் சிவனே போற்றி. 16

கந்தரை கனல்கா னீராற் கலந்திங்ஙன் கட் டப் பட்ட, வெந்திரம் வல்லாய் போற்றி

யியங்கிட வளிப்பாய் போற்றி, யந்தமுஞ் செய்வாய் போற்றி யாநந்த வுருவே போற்றி, பந்தனை யறுப்பாய் போற்றி பரமகா ரணனே போற்றி. 17

வெல்க பூதபதி வெல்க சீவபதி வெல்க யோகபதி வெல்கவே, பல்கு பேருருவு கண்கை கான்முடி பகர்ந்தி டற்கரிய பான்மையாய், தொல்லை நான்மறையி னுலு முன்னியல்பு சொல்ல லாகுமள வல்லவால், வல்லவாறுசில சொல்லி யாமுனைவ ழுத்துகோமெனவ ணங்கினர். 18

துதித்தமா முனிவர் தலைகளால் வணங்கித் தொழுதகை யினர்களாய் நிற்பக், கொதித்தவான் புலத்துக் கொண்டல்வந் துதவிற் றெருப்பவே கொடியவெங் கூற்றை, யுதைத்ததா ளுடையா னுலகமுண் டுமிழ்ந்த வொருவனைத் தழுவியிங் கிவர்கள், பதைத்தகாரணமென் செய்யவேண் டுவதென் பகரெனப் பவளவாய் மலர்ந்தான். 19

அந்தமா விறைவ னருள்செய்வா சகத்தைக் கேட்டவ ரருந்தவ வெரியால், வெந்தபா வத்தால் விமலபா வத்தான் மெய்ப்பொருள் விளங்குவான் வேண்டி, யெந்தையே யெனையே யடைந்தன ரிவர்கட் கிரங்கியான் கேட்டட னிருப்பப், பந்தவே ரறுக்கும் பரமஞா னத்தைப் பகர்ந்தருள் செய்கெனப் பகர்ந்தான்.

உன்னைநீ யுணர்தி யல்லது வேறு ருணருவா ருனதுபே ரருளாற், றன்னையே தன்னுற் றானறி யறிவு சங்கரா விவர்க்கருளென்ற, பின்னர்மா முனிவர் தங்களை நோக்கிப் பிஞ்ஞகன் பெருகிய வருளா, லென்னை நீர் வினவு மரும்பொருள் வினவி யெய்துவீரெனவவர்க் கிசைத்தான். 21

கேசவ னுரைத்த மாற்றங் கேட்டவர் பணிந்து பின்னு, மீசனை வினவு மெல்லை யிருவிசும் பிடையே தெய்வ, வாசநம் வந்த தாங்கே யரியொடு மளவி றந்த, தேசினு லகில மெல்லாந் திகழவீற் றிருந்தான் றேவன். 22

யாதொன் றிலடங் கவிளைங் தவெலா
மியாதொன் றிடைநின் றதொடுங் குவதப்
பூதங் களினா தனோர்பொன் னணைமே
லேதங் கெடவே றியிருந் தனனால். 23
வானே முதலியா வையுமன் னிடமாய்த்
தானே முழுதா கியதத் துவமாங்
கோனே யிவர்கண் டுகொளும் படியா
னானே யரியோ டுமொரா தநமேல். 24
ஓவா மையுளத் திடையோ குசெய்வார்
பாவா லையமே வுபரம் பொருளைத்
தேவா திபர்தே டுசிவன் றனையே
யாவா வவர்கண் டனரா தநமேல். 25

அளவி றந்தவன் பாகிய வருந்தவர்க் கம
லன், முளரி யங்கண்வண் டுழாய்முடி முகுந்
தனை நோக்கி, வளமி குந்தமெய்ஞ் ஞாநநான்
மற்றுமக் குரைப்ப,வுளமொ ருங்கியன் போடு
கேட் டுணர்மினென் றுரைத்தான். 26

1. இருடிகள் வினவும் அத்தியாயம்
முற்றிற்று.

ஆக விருத்தம் - 30.

---

2. சாங்கிய யோக அத்தியாயம்.

மறைபயின் முநிவர் கேட்ப மாமறை
முடிவி னாலு, மறிவரு மறிவா நந்த வருளுரு
வமலன் றன்பாற், பிறிதரு பேத நீத்துப்
பெயர்விலா தொன்றா யெங்குஞ், செறிதரும்
தன்னை யீசன் றெரிதர வியம்ப லுற்றான். 1

அறைவதன் றிந்த ஞான மியாவரு மறியா
ரானான், மறைவுறச் செய்வ தொன்றாய் மண்
ணியே யுள்ள தென்றுங், திறலுடை யியம
மாதி செய்தசீர் மறையோ ராலு, மறிவரும்
பொருளை நீங்க ளறிமினென் றருளிச் செய்
தான். 2

இந்த ஞானத்தை யெய்திய வின்பத்தா
ரந்த மில்பிர மத்துரு வாயினோர்
பந்த மேவிடார் பண்டுமின் றாமென்றே
யெந்தை யீறிலி யீசனி யம்பினான். 3

மறைவுறும் பொருள்களினும் மறைவுறும்
பொருண்மிகவு, மறைவுறும் படிசெயலை யற
விருந் திடவுளது,செறியுமன் புடைமையொடு

திகழ்தருந் தவமுநிக, ளறிவுறும் படியிதனை
யறைவனென் றருளுமிறை. 4

அறிவென வுரைக்கப் பட்ட தவனுடை
யுருவு தன்னே, ருறைவிலா நிமலன் சாந்த
னுண்ணிய னென்று முள்ளோன், செறியு
மெப் பொருட்கு முள்ளாய்ச் சிந்மய மாயே
சான்றாய்ப், பிறிதரு மவித்தைக் கெட்டாப்
பெற்றிய னென்றா னீசன். 5

யாதொரு பொருட்கு முள்ளா யிருந்துள
வறிவு தன்னை, மேதகு புருட னென்று முயி
ரென்று மீச னென்றும், பேதமில் கால
மென்று மநமொடவ் வியத்த மென்று,
மோதிடு மறைக ளென்றே யுரைத்தன னொ
ழிவி லீசன். 6

ஆங்கவன்பா லாவவெலா மவனிடையே
யோவதுவு, மோங்கியமா மாயையினை யுடைய
நானதி லார்ப்புண்ணான், பாங்குறநா நாவுடலம்
பண்ணியிடு மாயிடினு, மீங்கிவைதன் னிடைத்
தோயா திவைநடத்து மியல்புமிலான். 7

பந்தமதி லொருக்காலும் பற்றுணு னப்பந்
தஞ், சிந்தைசெய்துந் தான்செய்யான் செய்
வானு யேநிற்கு, முந்தியவான் காற்றனனீர்
மண்ணல்லன் முழுதுமா, யந்தமிலா வாநந்த
வறிவுருவே யவன்வடிவம். 8

உயிரி னோடுமெந மவ்வி யத்தமுறு கந்த
மாதிபுல னைந்தலா, னயர்வி னாகியக மென்று
நின்றறியு மந்த நாற்கரண மும்மிலான்,
பெயர்வி லாதுசொலும் வாக்கி னோடுமுத
லைந்து மாய்விடய மும்மிலா, னுயர்வ தாய
வறி வேத னக்குருவ மென்று ரைக்குமொளி
மேனியோன். 9

அயில்கின்ற வவைமுதலாம் போகநுகர்
பவனல்ல, னுயிரல்ல னுயிர்க்குயிராம் புருட
னெனு மவனல்லன், மயலொன்றி யுள
மாயை யதுவல்லன் மற்றெல்லா, மயர்வின்றி
யறிகின்ற வறிவுருவென் றேயறிக. 10

இருளுட னேரொளி யாவதெவ் வண்ண
மருவவி லாவவை மற்றது போல

விரிவுள தாயச கந்தனி னோடும்
பொருவவி லாதப ரன்புணர் வெய்தான். 11

உலகினி லெவ்வண மொண்ணிழ றன்னோ
டிலகுவெ யிற்கல வாதது போல
நிலையில தாயச கத்தொடு நில்லா
னுலவவி லாதொளிர் கின்றப ரன்றான். 12

அறிவினோ டொன்றி நிற்குந் தமத்தொடு விகார மாங்கே, யறிவினிற் கலக்கு மென்று மணைந்துட னிற்கு மாகி, லறிவினுக் கநந்த கோடி கற்பம்வந் திறந்திட் டாலும், பிறிவ தற் காகு முத்தி யில்லையே பேசி லென்றும்.

முத்தியை யடைந்து யர்ந்த நித்தநன் முநிவ ரென்று, மொத்தபே ரறிவே தன்பா லுள தவி கார மென்றுஞ், சுத்தமுற் சுகதுக் கங்க டொடர்பிலா நந்த ரூப, நித்தமென் றிடவுங் காண்ப ரென்றன னிகரி லீசன். 14

யானே செய்கின் றனனெவையுஞ் சுகதுக் கங்க ளென்செயலே, யூனே வாடி யிடறடித்த லுடையோ னானென் றுரைத்திடுவோ, ரானா

வறிவின் றன்மேலே யாங்கா ரத்தை யிடுத வினா, னானே யெல்லா மென்றிருப்பர் ஞான மில்லா ரெனவறிக. 15

அறிவினை யுடைய ராகி யருமறை முடிவு கண்டோர், செறியுமெய்ப் பொருட்குஞ் சான் றாய்ச் சின்மய மாயே தன்னிற், பிறிதரு மவித்தைக் கெட்டாப் பெற்றியோ டெங்கு நிற்கு, மறிவென வுரைப்ப ரல்ல தயலொன் று மின்மை கண்டே. 16

இன்பமொடு துன்பமது வின்றியொர்வி காரந்
தன்கணதி லாவறிவு சார்வதிலை பந்தம்
பின்பதுள னாவதறி யாமைமுத லாலென்
றென்பதுள தாகுமுட லோடியையவென்றும்

எப்பொழுது நின்றுதய மானவொளி தானே
மெய்ப்படவி ருந்தறிவ தாகியெவ்வி டத்து
மொப்பில்பர னாகுபுரு டன்னகம ணைந்தே
செப்பரிய வேறுபல செய்வனெனா நின்றே.

இத்தன்மைய தாகுமவ்வி யத்தமொடு கூடு
மறி, வெத்தனையு முட்புறமி ருந்தறியு மேனா

ஞ், சுத்தமது வாயதன துண்மையறி யாதே,
யத்தன்மைய தாயவுரு வாயழியு மன்றே. 19

தானலா தொன்றைத் தானு யறிந்திடு
மதனு லென்று, மானதாஞ் சுகதுக் கங்க
ளியாரையும் வெறுப்புண் டாக்கு, மீனமா
மயலோ டொன்றி யிருந்திடு முடலங்
கொண்டே, யானதா யழியு மென்று மறியா
மை முதலாய்க் கொண்டே. 20

கருமஞ்செய விடர்வந்துறு மதுபுண்ணிய
பாவந், தருமென்றுரை செயுமாமறை யவை
யாகிய வசமே, யுருவந்தரு முழுதும்முள
தாகும்மென வொழியா, வருடந்திடு மொளி
மேனிய தறிகென்றருள் செயுமால். 21

அழியா தெங்கு முளதாகி யனைத்துட்
புறம்புந் தானிரம்பி, யொழியா வறிவா யொரு
குற்ற முரைத்தற் கரிய தொருபொருளே,
கழியா மாயை யதனுலே காணப் பலவாய்த்
தோன்றியிடு, மழிவா யினதென் றுென்று
மிலா திருக்கு மதுவே யியல்பென்றுன். 22

ஆதலான் முநிக ளுண்மை யொன்றென
வுரைப்பர் வேரும், பேதமவ் வியத்தத் தாலா
மென்றன ரதுவு மென்று, மோதிய மாயை
தன்னை யாசரித் திருந்தே செய்யு, நீதிய
தென்று கொண்டே நிகழ்த்தின னிகரி
லீசன். 23

யாதொர்படி தூமமொடு தூளியொளி யாய
நீதியுடை வானைமறை யாதவண மேபோ
லோதுபுல னேடுகர ணம்முறுப வெல்லாம்
போதமுட னென்றியவை நின்றுபுண
ராவால். 24

அடுத்தநிற மெத்தனைய தாயபடி கவ்வே
றடுத்திடவி லாதுதன தாயவொளி யேபோ
லடுத்தகம தாகியணை யாதவறி வென்றும்
விடுத்திருளை மிக்கொளிய தாய்விரியு மன்றே.

நல்லறிவு ளோருலகை ஞானவடி வென்றே,
சொல்லுவர்க ளவ்வறிவி லார்தொழிலில்
வேரும், பல்வகைய தேபொருள தென்றறி
தல். கொண்டே, நில்லதில தாமுலகு கண்
டிடுவர் நின்றே. 26

யாதொரு பொருட்கு முள்ளாய்க் குண
மின்றி யெங்குந் தானாய்ச், சேதந னாயே
யென்றுந் திகழ்ந்திடும் பரிசு காணா, ரேதமா
மயக்கந் தன்னா லியாவையு மிருந்த வண்
ணம், பேதமாய்க் காணா நிற்ப ரென்றனன்
பிறவி நாசன். 27

படிகந்தனி னிடையேபல நிறம்வைகவவ்
வுருவாய், வடிவந்தன தெனநின்றிடு மதுபோ
லறி வுருவு, முடிவொன்றமில் பொருளெங்
கணும் முழுதும்மொளி. யாயே, வடிவந்தொ
றும்வடிவந்தொறும் வேறாய்வரும் வகையே 28

ஆதலா லழியா நித்த சுத்தமா யெங்குந்
தானாம், பேதமி லறிவு தன்னைப் பெரியவர்
பேசக் கேட்டு, மோதியு நினைந்து நாளு மருச்
சனை செய்ய வேண்டு, மேதமில் வீடே யெய்
தற் கிச்சையே யுடையோர் தம்மால். 29

யாதொரு பொழுதி யோக மநத்திடை
யெங்கு நின்ற, சோதியா யிலங்கு போதஞ்
சோகத்தா லிடைவி டாத, நீதியா னிகழ்ந்
தெப். போது நின்றிடிற் றானே தன்னி,

ஞேதிய பரிசு நின்றா னென்றன னுமை
யோர் கூறன். 30

பூதங்க ளவையுந் தன்பாற் புணர்ந்திட
நிற்றல் கண்டே, பூதங்க ளவற்றி னுள்ளும்
புறம்புந்தா னிற்றல் கண்டோன், பேதங்க
ளனைத்து மில்லாப் பிரமமே யடைந்து வேறா,
மேதங்க ளனைத்தும் விட்டோ னென்றிட
லாகு மன்றே. 31

யாதொரு பொழுதி யோகந் தன்னையே
யியற்றி யின்ப, மேதகு சமாதி தன்னை யடை.
ந்துவே றாகி நின்ற, பூதமியா தொன்றுங்
காணா திருந்தவ னெங்கு நின்ற, சோதியாந்
தன்னிற் றன்னைச் சோர்வின்றிக் கண்டே
நின்றான். 32

யாவனி யாதொரு போதித யத்தே
மேவிய வாசையெ லாமற விட்டா
னேவரு மின்னமிர் தாயவ னப்போ
தோவவி லாதொளிர் வீடடை வுற்றான். 33

பூதங்க ளுடைத்தா யுள்ள வேறெலா மொ
ன்றின் கண்ணே, யேதங்க ளின்றிக் கண்டு

மதினின்று மெல்லா மாய, பேதங்க ளனைத்
துங் காணா தன்றிவன் பிரம மென்று, வேத
ங்க ளனைத்து மோது மெய்யறி வடைந்து
நின்றான். 34

யாவ னொருவ னறிவுருவாந் தனையே
கண்டு மற்றொன்றாய், மேவ லின்றி வேறுப
டக் காணான் விளங்க வப்பொழுது, நீவி
னிலையா யுலகனைத்து மாயை தானே யெனக்
கண்டு,மேவ லரிதாம் வீடடைந்தா னென்றே
விளம்பி யிடலாகும். 35

பிறப்பினொ டிறப்புமிடை துன்பமடை
வென்னா, தறப்பரிவு செய்வதொர் மருந்து
ளத தாய்வ, திறப்பில்பர மாயபிர மம்மதனை
யெய்துஞ், சிறப்புடைய ரானபொழு தேசி
வம தாவார். 36

ஆறுபல கூடியுல கத்தலைக டற்கே
வேறறவுண் மேவியுட னாகும்விளை வேபோ
லீறில்பர மாயருவ தாயபிர மத்தோ
டாறுமறி வானவைய டங்கியிடு மன்றே. 37

ஆதலா லெல்லா மாகி நின்றது மறிவே
வேறொன், றோதிடக் கண்ட தில்லை யுள்
ளபே ரறிவை நீக்கி, யேதமாம் பந்த மோடிவ்
வுலகமு மிலையே பார்க்கி, லாதியா மறிவை
மூடி யறியாமை மயக்கு மன்றே. 38

அவ்வண்ண முரைத்த ஞாந மமலமாய்
நுண்ணி தாகி, மெய்வண்ண விகார மின்றி
வேறொன்றோ டணைத லின்றி, மைவண்ண
விருத்தி யின்றி வளரொளி யாயே நிற்கு,
மிவ்வண்ண மல்லா தெல்லா மிருளுடை
யறிவா மன்றே. 39

ஓங்கிய முனிகா ளுங்கட் குரைத்தவே தாந்த
சாரஞ், சாங்கிய ஞாந மென்றே சாற்றிடுந்
தன்மை யாகு, மீங்கினி யோக மாவ திறை
யின்றி விடய மெல்லா, நீங்கியே யென்ற
னோடு நிலைபெற நிற்றல் சித்தம். 40

யோகஞ்செய ஞாநம்முள தாகுமத னாலே,
யாகும்மித யோகம்பினை யதுவேசெய லுறு
வோன், சோகம்முறு பயனுமவை யெய்தா

தள வில்லாப், போகம்முழு தெல்லாம்புணர்
கின்றுனிவ னேயாம். 41

யாதொன்றினை யோகஞ்செய்து பெறுவா
ரவர் பயனைப், பேதம்மில ஞானந்தனை யறி
வோர்பெற விசைவா, ரேதம்மில தாகும்வண
மொன்றுயிடல் கண்டே, போதம்முறு பா
மாகிய பொருள்கண்டது புணர்வார். 42

யோகஞ்செய்து நின்றோன்றுகை விட்டே
விட யம்மேன், மோகஞ்செல விழுமாலவர்
முடிவில்லிட ருறுவார், சோகம்மொழி விக்
கும்பா மெய்தார்தமை யடையா, ராகம்மறை
முழுதும்மது தனையேயறை தருமால். 43

அறையுமவ் வியத்தஞ் சீவன் மாயையா
லகிலஞ் செய்யு, மிறைவனு மீச னென்று
மியம்பிடு மறைக ளென்னை, முறைமையா
லுயிர்கட் கெல்லா மாகியே முழுதுங் கண்
டே, சிறையிறந் தோங்கி யெங்குந் திகழ்தரு
மொளியு நானே. 44

எல்லாரு மாசை யுறுகின்ற யாவு மிரதங்
கள் கந்த மெனிலே, நில்லாதி றந்து வரு

மாறி லாது நிலையாகி நின்ற வெனிலே, பல்
லார்மெய் கைக ளொடுகால்க ளெண்ணில் பல
வாய வற்றி னறிவாய், நில்லாது நின்று
நிகழ்கின்ற தென்று முளனுய்வி ளங்கு
மெனிலே. 45

கண்ணின்றி யெல்லாங் காண்பன் காலி
ன்றி யெங்குஞ் செல்வன், விண்ணின்ற
வோசை யெல்லாஞ் செவியின்றி விரைந்து
கேட்பன், பண்ணின்ற கைய தின்றிப் பற்
றவன் விடுவ னென்றே, யண்ணனன் முனி
வர் தங்கட் கருளின னறியும் வண்ணம். 46

எல்லா ரையுநா னறிந்திருப்ப னென்னை
யறிவா ரியாருமிலை, நல்லா ருண்மை யெனக்
கண்டோர் நாடி நின்றே யறிந்தபடி, யல்லா
தில்லா வளவில்பரம் புருட னெனவு மறி
வின்றி, யெல்லா மாகி யல்லாத வேக மெனவு
மியம்புவரால் 47

பார்த்துள முனிவ ரென்னைப் பரமென்றும்
பண்டு மின்று, நீத்துள குணத்தோ னென்
று நிம்மல ரூப னென்று, மாத்துமப் பொரு

ளீ தென்று மலர்தலை யுலகுக் குண்மை, யாய்த்துமிவ் வறிவே யென்ப ரல்லவ ரறியாரென்றும். 48

யாதொன்றை யமரர் தம்மா லறிவரி தாகுமென்ற, ஞேதிய மாயை மூட மோகத்தாலுணர்வ தின்றி, யேதுவொன் றிசையாவென்ற னுண்மையா மறிவைக் காணு, நீதெ ன முநிகட் கெல்லா மியம்பின னிமையோர்க் கீசன். 49

நானே மாயை தனைக்கடந்து நிற்பேன் ஞாலந் தனையியற்றே, னேனை யனவுமெனையொழிய யாதோர் செயலு மில்லதனு, ஞனே சகத்தை நடத்தியிடு நாத னென்று நடுவென்று, மானு வறிவோ ரறிந்திடுவரென்றே யருளிச் செய்தனனல். 50

எங்குந் தானு யாவையுமாய் நின்றே யொன்ரு யழிவின்றி, யங்க மொன்றின் றறிவேயாய் நுண்ணி தாய வருள்வடிவைத், தங்கு ஞான யோகத்தான் முன்பா சரித்துப்

பிணைவந்தெ, னங்க மான பேரொளியோடொன்றி யானு யடங்கிடுவார். 51

ஆங்கவர்க ளென்னுடைய மாயையைவசித்து, நீங்கியபின் னின்மலம தாயவுரு வாவ, நீங்கிதுசெ யாதவர்க ளென்றுமெனை யெய்தா, ரோங்கிவரு பந்தமதி னின்றுடனு ழைப்பார். 52

சுத்தனு யொன்ரு யென்னைக் கூடிடுந் தொன்மை யோர்க, ளெத்தனை நூறு கோடி கற்பங்க டான்சென் ருலு, மெய்த்தக மீளாரென்றன் விளங்குமெய் யருளா லென்றே, யித்தகைத் தெனவே வேத மியம்பிடு மென்ரு னீசன். 53

என்னு லுங்கட் கியம்பியவிஞ் ஞான ஞான யோகிகட்கும், பின்னு முமது புத்திரர்க்கும் பேணு மியோக சாங்கியர்க்குஞ், சொன்னு லாகு மல்லாரைத் தூரவொழிப்ப திதுவென்றே, தன்னே ரனையா னுமீசன் ருனே சாற்றி யருளினன். 54

அன்றரி யாமை யாகி யருள்செய்த புரா
ணந் தன்னின், முன்றிகழ் பிறவி தீர முனிக
ளுக் கீசன் சொன்னான், குன்றிடா மறையி
னீறாங் கீதையி னிரண்டா மத்தை, யின்
றெலா மறியும் வண்ண மியன்றவா றுரைத்த
தன்றே. 55

2. சாங்கிய யோக அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் - 85.

---

3. சம்பிரதாய அத்தியாயம்.

முன்ன நான்மறை யோதிமு டிந்ததை
யுன்னு மாறரி தாகிய வொன்றினை
ஞன்னு ஞாநமு ஞேயமு மல்லதை
யின்னங் கேண்மினென் றீசனி யம்பினான்.

நன்றாய் ஞாந கநமாகி நாநா வெல்லாம்
பிறப்பிடமா, யொன்றாய் வேறோர் பொரு
ளின்றி யொளியா யொன்றோ டுவமிப்ப,

தன்றா யகில சராசரங்கட் காதா ரந்தா
னாயென்றும், பொன்றா ததுவா யவிகாரப்
பொருளாய்ப் புலனாய்ப் புணர்ப்பரிதாய். 2

இரண்டா வதிலா தளவைகளா லெட்டா
ததுவா யெங்கெங்குஞ், சிரங்கால் கைகண்
முகமுடைத்தாய்த் தெரியப் படாதாய்த் திர
மாகி, யிரும்பார் நீர்தீ கால்வான மெல்லா
மிருத்தற் கிடமாகும், பரந்தா னுணர்ந்தோர்
நிர்க்குணமாம் பரம வியோம மென்பர்க
ளால். 3

அரிதா யறியா வறிவேயா மனைத்தா
ருயிர்க்கு முயிரந்தப், பெரிதா யகமும் புறமு
மாம் பிரம நானே பிறர்க்கென்றாந், தெரியா
தென்னா லேபரம்பி யென்பா லிருந்திச் சக
மெல்லாஞ், சரியா நின்ற தென்றறிவான்
சகல வேதங் களுமறிவான். 4

ஒருதா னாய பரம்பொருளை யுணரப் படாத
வியல்பதனாற், றெரியா மையெனப் படுமந்தத்
தெரியா மையிலே திகழ்காலம், பிரதா னந்தான்
புமான்பிறந்த வவற்றான் முழுதும் பிறத்த

விஞ, னிருபா திகமாம் பிரமமய நிகழ்வே
யிந்த நிகழ்வெல்லாம். 5

சொன்ன காலம் பகுதிபுமான் ரேற்ற மெ
ன்பா விரண்டிற்கு, மூன்ன ராகுங் காலமிவை
மூன்ற மென்பா லேமுடியு, மன்ன தன்மை
யாலாதி யந்த மின்றி யந்நியமா, மென்
னில் வேரு யின்மையிஞ லென்ன திருவே
யென்பர்களால். 6

மகமுத லாக விசேடமீ ருக மன்னுமிச்
சகத்தெலாந் தந்து, சகலவா ருயிர்க்கும் மோக
மே செய்யுஞ் சத்தியைப் பகுதியா கவுமப்,
பகுதியி லாங்கா ரத்துடன் புணர்ப்பாற் பஞ்ச
விஞ் சகனெனப் பட்டுச், சுகமொடு துக்கந்
துய்ப்பவன் புருட ஞகவுந் துணிந்தனர்
தொல்லோர். 7

ஆதிவி காரப் பகுதியின் மாஞ மறிதலில்
விஞ்ஞா தாவும வன்பே, ரேதவ கங்கா ரம்
மென மாஞ மொருவனு மேயங் கிருபெய
ருற்ருன், நீதுறு தேகங் கொண்டுந டத்துஞ்
சீவனு மாகச் செப்புத லுற்ரு, ஞதலி னெக்

தப் பிறவியு மின்ப துன்பமு மாங்கா ரத்தவ
ஞலே. 8

கோல மறிவே சீவனுக்குங் கொண்டு துய்
க்குங் கருவிமநஞ், சாலு மதஞ லவிவேக மத
ஞற் றுன்பஞ் சாருமான், மாலும் பகுதி யிற்
புருடன் வைத்த பற்ருன் மற்றந்தக், காலஞ்
செய்யும் பிறப்பிறப்புக் கதுவே யென்றுங்
காரணமாம். 9

படைப்பதுங் காலந் தானே படைத்தவை
யாவு நோய்த், துடைப்பதுங் காலந் தானே
தொல்லையி றில்லாக் காலத், திடைப்படத்
தோன்றி மாயு மியாவையு மியாவ ரேனுங்,
கடப்பவ ரில்லைக் காலங் காலமே கடந்து நிற்
கும். 10

நிகில வுலகு நடக்கும்வகை நேரே நியமிக்
கின்றததி, சகல வுயிர்க்கு முயிருமது தானே
யுள்ளா யிருக்குமது, வகில வறிவு முடைய
தது வாத லான்மற் றக்காலர், பகர வுறவர்
சநாதநனும் பகவான் புருடோத் தமஞக. 11

இந்தி யங்களிற் பரமந மநத்திலாங் கார
மந்த மானவாங் காரத்திற் பரமவ்வி யத்தம்
பந்த மாமதிற் புமான்பர மதிற்பரங் கால
மிந்த யாவைக்கு முயிரி திங் கிதனிறு லெல்
லாம். 12

சகத்தி னுயிராங் காலபரந் தன்னில் வியோ
மம் பரமதனே, மிகுத்து நின்ற வியல்பதனல்
வியோமா தீத னுயெல்லாந், தெகித்த வதனு
லநலென்று செப்பப் பட்ட யானுகும், பகுப்
பொன் றில்லாப் பிரப்பிரம மென்னில்
வேறோர் பரமில்லை. 13

பரமா மெல்லாப் பொருளுக்கும் பரமா
யுள்ள வெனையறிந்த, வரமா முனிவன் றூனெ
ன்ற மரியான் பிறவான் மன்னுசரா, சரமா
முலக மெனையொழியத் தானுண் டாகா
தொருகாலுந், திரயா நானே யுலகனைத்துஞ்
செய்கின் றேனுஞ் சிதைப்பேனும். 14

ஏகமாய் நின்ற வென்ற னேவலா லெல்லை
யில்லா, மோகமாஞ் சகத்தை யென்றன்
முன்னரே நின்று காலம், பாகமாய்ப் பண்ணு
மென்று பரம்பர னருளி யீதே, யாகும்வே
தங்க ளெல்லா மறைந்ததென் றருளிச் செய்
தான். 15

3 சம்பிரதாய அத்தியாயம்-முற்றிற்று.

ஆக விருத்தம் - 100.

---

4. பத்திமை அத்தியாயம்.

விரிந்ததிங் கேவனல் விண்மு தற்பொருள்
பெருந்தகை யாமவன் பெருமை பேசிடப்
பரந்தெழு சிந்தையை யொருக்கிப் பத்தியா
லருந்தவர் கேண்மினென் றருளிச் செய்கு
வான். 1

சகத்துளோ ரியாவர்க்குஞ் சான்றாகி யா
னென்று, மகத்துளே நின்றாலும் பழகியபத்
தியினன்றி, மகத்தினுற் றூநத்தான் மாதவத்

தான் மற்றுமொரு, முகத்தினு லொருவர்க்கு முன்னிற்கு மவனல்லேன். 2

ஈங்கென துள்ளா யிருக்கவெப் பொருளு மெதுக்குமுள் ளாகியா னிருப்பன், ருங்கு வன் முழுதுந் தருகுவ னெல்லாஞ் சகலமு மழிவதென் றன்று, லோங்கிய முனிவர் பிதி ரர்மற் றும்ப ரொளிமிகும் பிரமரிங் திரர்வே, ருங்கொளி மிகுத்தோ ரியாவரே யாக வவரு மென் னுண்மையை யறியார். 3

சந்ததம் வேத மியாவையும் பரமாச் சாற்ற வும் படுவதிங் கெனேயே, யந்தண ரெல்லாம் வேள்வியி னுலு மங்கியிற் போற்றுவ தெனே யே, யெந்தலோ கத்தும் பிதாமகன் முதலா மியாவரு மிறைஞ்சுவ தெனேயே, சிந்தையை யொருக்கி யோகிக ளுளத்தே தியாநமுற் றிருப்பது மெனேயே. 4

ஏக ஞகி நிற்கின்ற யானே யெல்லா விமை யவர்க்குந், தேகம் பண்ணி யவற்றுள்ளே தித னய் நிற்ற லாய்ச்செய்யு, மியாக மெல்லா

மெனக்குறித்தே யியற்று கின்ரு ர்வற்றில விர்ப்,பாகங் கொள்வே ஞனவற்றின் பயனுங் கொடுக்கப் படுவேனுன். 5

பத்தியினு லியாவர்சிலர் பரவியெனப் பணிகின்ருர், சத்தியமே யவர்களுக்குச் சங் நிதிபண் ணுநிற்ப, னித்தமுன்ன நால்வேத நிட்டர்களா யறநெறிசே, ருத்தமரா மவரெ னினு மொழிவறவே யுணர்கில்லார். 6

மறையவ ரரசர் மாதவஞ் சிறந்த வணி கர்தா மநத்தினுல் வணங்கிற், குறைவறு பர மா நந்தமாம் பதத்தைக் கொடுப்பனுன் குல மிலா வெந்தக், கறையுறுங் குலத்தோ ராயினு மதனைக் காலபா கத்திலே பெறுவ, ரிறை யென வெனேயே பத்தியான் மலரிட் டிடை விடா திறைஞ்சுவ ராகில். 7

பழுதிலவ ரென்னுடைய பத்தரொரு காலு, பழிவிலர்க ளென்றடியி லேயறைத லுற்றேன், ரெழுதவரொ னன்பனேயெ னத்

தொழுத லுற்றா, ரொழியவிகழ் வாருமெனை
யேயிகழ்த லுற்றார். 8

கலையாள ரியாவரினுங் காயாதன் மலராத,
விலையாத னீராத வியன்றதுகொண் டென்
பாலே, நிலையாய பத்தியினா னித்தமெனை
வழிபடுவோன், றலையாய வன்பனெனக் கியா
வரினுந் தானினியான். 9

படைத்தவனைப் படைத்தவற்குப் பண்
டையே மறையனைத்துங், கொடுத்தவனா
னாதலிலெக் குரவர்க்குங் குருபரனான், றுடை
ப்பவனா னசுரர்களைத் தொல்லறத்தி னின்
றோரை, யிடர்ப்படுமா றொழித்தவர்கட் கின்ப
மளித் திடுபவனான். 10

ஓது மியோகியர்க டங்க ளுற்பவ மொழிப்ப
னானுறு பிறப்பினுக், கேது நானொரு பிறப்பி
றப்புமில னாவ னானிவகி லத்தினுக், காதி
நானது துடைப்ப னானது புரப்ப னான்முழு
தளிப்பனா, னீதி தானினைய லற்ற மாயை
செய்து நித்த னாய்மறைய நிற்பனான். 11

வஞ்ச மாயையொரு சத்தி யென்றனது
மற்றி யாரையு மயக்குமாம், விஞ்சை யாகு
மொரு சத்தி மற்றெனது விமல யோகுபுணர்
வார்கடங், நெஞ்சின் மேவியத னாலம் மாயை
யினை நீக்கி யேநிகழு கிற்பனா, னஞ்சி
டாதெனை யநந்த சத்திகளு மியானி னைத்த
வண மாகுமால். 12

ஆலம் பகமாஞ் சத்திகளுக் காலம் பகனா
னடங்கவுமென், பாலங் கிருக்கு முத்தியு
மென் பாலே யெவர்க்கு முள்ளாயென்,
மாலொன் றியமா யையையடைந்து மல
ரோன் வடிவு கொண்டொன்று, ஞாலந்
தன்னை யுண்டாகப் பண்ணு நாநா விதமாக.

ஓதி யாவையுந் தானா யுயிர்க்கெலா
நாத னாகிய நாரா யணனெனுந்
தீதி லாதவென் சத்தி திதித்தலா
லீதெ லாநிலை பெற்றேயி லங்குமால். 14

மூன்றா வதுருத் திரமூர்த் தியதாய்த்
தோன்றா வகைநின் றுதுடைப் பதனைச்

சான்ேறார் பலர்தா மதகா லமென
வூன்று வெனதா கவுரைப் பர்களால். 15

நித்தநிய மத்துடனே நெறியுறப்பார்ப் பார்
கள்சிலர், பத்தியாற் பார்ப்பர்சிலர் பாவனை
யாற் பார்ப்பர்சிலர், சத்தியமா ஞானத்தாற்
பார்ப்பர்சிலர் சாற்றுகின்ற, வெத்திறத்தா
ரினுமிவனே யெனையுணரு மெய்ஞ்ஞானி. 16

அறிவால் வழிபா டுறுவா னெவன்மற்
றவனென்னிற், பிறிவா னவனியா னென
வே நினைமின் பிறர்தாமு, முறவால் வழிபா
டுடையா ரடையா ரொருகாலம், பிறவா
ழியிடைப் பிறிவா யெனையே பெறுகின்றார்.

எல்லா வுலகங் களுமென் பாலே யென்
னாலே, செல்லா நின்றுஞ் செயலொன் றில
னான் சிவயோகி, யல்லா னடவா தெனவும்
மந்தச் செயலென்பா, வில்லா தனையும்
மறிவா னென்றும் பிறிவானல். 18

கால மாகிய பாஞ்செயு முழுவதுங் கண்டு
கொண் டிருப்பேனு, னாவி னாலுநுண்

ணுணர்வினாற் பிறிதினு னுவன்றிடப் படு
வேனான், மாலி லாதமா யோகிமா தேவனான்
மகத்துவ மெனக்குண்டா, மூல மாகிய பரத்
தினிற் பரமமா முறைமையான் மொழிகின்
றேன். 19

படைப்பவனு னெப்பொழுதும் பரம்பர
யோ கிக்கிருந்து, நடத்துவனு னனவொடுக்க
மிலாஞான யோகத்தாற், கிடைத்திடுமென்
றனையாகக் கெழுமியயோ காநந்தத், திடைப்
படலா னடஞ்செய்வே னெல்லையில்பே ரின்
பத்தால். 20

யானுடி மியல்பறிவா னெல்லாவே தமுமறி
வான், வானுடர் மாமறைக ளறைகின்ற
மறைவிதனைத், தானுளும் பெறவுரியான் றவ
முடையா னிசமுடையா, னுனத வன்புடை
யா னுகிதவ நலமுடையான். 21

4 - பத்திமை அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் - 121.

---

5 - விசுவ ரூப அத்தியாயம்.

இவ்வளவு தானருளி யின்பமுட னன்பர்ச்
கவ்வளவி லாததிரு மேனியத னாலே, யெவ்
வொளியு மானவனி லங்கியவ ருள்ளே, செவ்
வொளிவி ளங்கநட நின்றுசெய லுற்றான். 1

எண்ணமதி றந்தபர யோகவித யத்தே,
வண்ணமதி லாதபர மாகியம கேசன், விண்
ணினிடை யேவிமல ஞானவரி யோடுங்,
கண்ணினெதிர் நின்றுநட மாடவவர் கண்
டார். 2

எவன் மாயை யிந்தவுல கெல்லா மாகி
யிருப்பதுவா, மேவ னாலே நடக்கின்ற தேவன்
பதங்கள் சிந்தித்தே, பாவ மான வஞ்ஞாநங்
தன்னா லுண்டாம் பயம்போகு, மாவ வந்தப்
பரம்பொருணின் றாடக் கண்டா ரன்
போடும். 3

நித்திரையு றாதவதில் வாயுவைநி றுத்திப்
பத்தியொடு சாந்தியைய டைந்தபர யோகத்

துத்தமர்க ளாதலுத யாத்தமங மில்லாச்
சுத்தவொளி யோடவ்வொளி கண்டனர்க
டுயோர். 4

கணமாத் திரையிற் கழல்கை தொழுவோ
ருணரா மையழிக் குமுருத் திரனை
வணநா டரியா னையம்மா முனிவர்
கணமா வெளிகண் டனர்கம் மிசையே. 5

சிரங்க ளாயிரஞ் சேவடி யாயிரங்
கரங்க ளாயிர மாய்க்காத் தேந்திய
வுரங்கொ டண்டமு மோங்கிய சூலமும்
பரந்த வேணியும் பான்மதிக் கண்ணியும். 6

புண்டரிக வுரியுடையும் பொன்னொளியாற்
பூமகன்பே, ரண்டமெலா மாவரித்த வந
லிரவி மதியென்னக், கொண்டிலகு முக்கண்
ணுங் கூரெயிறுங் கோடிபெய, ருண்டருக்க
ரெறிக்கின்றா ரெனத்திகழு மோருருவும். 7

தனதான திருவுருவிற் சகமெலாம் பிறந்து
தன, தநலாலே யழியமிக வதிசயமாம் படி
காட்டி, யினமான தில்லாத விந்தவடி .வங்

தானே, யனையாநின் ருகாசந் தனிலாடி யரு
ளினனுல். 8

ஞாலமெலாஞ் செய்கின்ற நாதனைஞா னச்
சுடரைக், காலவுரு வனைக்கலைக ளியாவையு
மாங் காரணனை, யாலமமர் களத்தனையிவ்
வனைத்துயிர்க்கு மதிபதியைச், சீலமிகு யோகி
கடஞ் சிந்தனையிற் றிகழ்தேசை. 9

உற்பவநோ யுற்றவர்க ளொழிப்பதனுக்
கொருமருந்தாங், கற்பகத்தை யோகிகடங்
காரணத்தை யாரணந்தேர், தற்பதத்தைப்
பரமான சத்திகட்குச் சத்தியா, மற்புதவா
தாரத்தை யமரேசர் தொழுமரசை. 10

ஆகா தழியா திருந்தபர மானந் தத்தை யகி
லத்துக், கேகா . திபனை யெத்தேவு மெல்லா
முனிவர் களுமிறைஞ்சி, நீகா வென்னு நின்
மலனை நித்யத் துவத்தை நிரந்தரமா,
மியோகா லடையு முயர்பதியை யொளிகட்
கெல்லா முள்ளொளியை. 11

துறவின ரறிவிடைத் தோன்றுஞ் சோதியை
யுறவினி லறிபவர்க் கெளிய வுண்மையைப்

பிறிவினி லறிவரி தாய பெற்றியை
யறிவினை யறிபவர்க் கருளு மண்ணலை. 12

மாதா விலியா கியகருணை மாதே வனைமா
மாதவத்தி, ஞதா ரத்தை யொருகாலு மழி
யாச் செல்வ மளிப்பவனைப், பேதா பேத மற்
றெல்லாந் தானு யிருந்த பிரமத்தை, யோதா
துணரு மியோகத்தை யளித்தற் குரிய
வொண்சுடரை. 13

உருவோவிங் கருவோவென் றும்பர்க்கு
முணர்வரிதாய்க், கருவாகி நின்றபெருங்
கண்ணுன காரணனைச், சொரூபாநந் தனைத்
தனது சோதியுளத் தேதோன்றக், குருவாகுந்
திருமேனி கொண்டாடக் கண்டார்கள். 14

கண்டு மாயையை யதற்கு ளேயொருவர்
காணு ணவகை கரந்துதா, னண்டர் மாயை
யை மறைத்து மீண்டுவெளி யாகி யாடியரு
ளண்ணலை, வண்டு ழாய்முடிய ஞன வச்சகல
லோக யோநியை யிடத்திலே, கொண்ட
கோலமொடு கண்டு மாமுனிவர் கூறு ணவு
வகை கூடினர். 15

குரம்பையினுள் ளேயிதயக் குகையின் மறைந் திருக்கின்ற, பரம்பொருளைக் கண்ணு லே பார்த்துப்பல் காற்பணிந்து, கரந்தலையிற் குவித்துத்தங் காதல்கரை யழிவுறநின், றூரந் தாவோங் காரத்தை யுச்சரித்தங் குபநிடத் தால். 16

பழுதி லீசன்முன் பாவகற் கண்டதோ
ரிழுது போலவி த்யமெ லாமுக
வழுது மன்பினொ டாடியும் பாடியுந்
தொழுது தோத்திரஞ் செய்யத்தொ டங்கினர்.

ஆகமுறு மாருயிர்நீ யவ்வுயிர்க்கு மதிபதிநீ, போகநுகர் புருடனுநீ நுகர்விக்கும் புராதநனீ, யோகிநீ யுணர்பவனீ யுளந்தொறுநின் றுணர் கின்ற, வேதனீ நிர்மலமா யாவையுமாம் பரம்பொருணீ. 18

காரண மெல்லா மொடுங்கினவர் காயத் துள்ளே கதியாகிப், பிரம யோநி யாயுள்ள பெரும வென்றும் பிறவாதாய், மரண மில்லா நின்செம்பொன் வடிவே பரமாய் மற்றெதி

லும், பரம மாகி யுயிர்க்குயிராய் நிற்கும் பர மாய்ப் பார்க்கின்றோம். 19

பரமா ணுவின துருவாகிப் படைப்பாய் நீபல் லுலகுகளுந், திரமா மூன்று லேயுண் டாஞ் சிறிதிற் சிறிதாய் மிகப்பெரிதிற், பெரி தாய் நின்னில் வேறில்லாப் பெருமை காணும் பெருந்தகமைக், குரியா ரெல்லா மொருநீயே வேறொன் றிலதென் றுரைப்பர்களால். 20

போத ளுகிய புராணனும் புருடனைப் பொருட்கெலா முயிராக, வாதி நாள்படைத் தனையவன் படைத்தன னகிலமு மந்நாளே, வேத மியாவையும் விரித்தனை யுன்னிலே மீளவு மனைத்திற்கு, மேது பூதனு யுளந்தொறு மிலங்குநின் னியல்புகண் டனமெந்தாய். 21

இப்பிரம சக்கரமி யங்குவது முன்பா
லப்பெரிய மாயையுடை யாயமல நீயே
சிற்பரம யோகபதி திவ்யநட நாநின்
பத்மசர ணங்கள்சர ணென்றுபணி கின்றோம்

எந்தைநீ பரமா காசத் திடையுறு நிருத்தங் கண்டோ, மிந்தவெப் பொருளு மானு யேகநீ

யாகி நின்ற, வந்தநின் மகிமா வைக்கண் டதி
சய மாக வுன்ன, தந்தமில் பரமா நந்த மநு
பவித் தநுப வித்தேம். 23

உன்னுரையா மோங்கார முயர்முத்திக்
கொருவிதைநீ, தன்னியுட ேனுநீ தோன்
ருமை மறைந்திருத்தி, நின்னிடையெல்
லாமாய நீமாயாய் நின்னொழிய, வந்நியமா யுள
வெல்லா மசத்தியமென் றறைவர்களால். 24

தொழுதரு மறையெலாந் துதிப்ப துன்னையே
பழுதறு முநிவர்கள் பணிவ துன்னையே
யொழிவற வுணர்பவ ருணர்வ துன்னையே
யழிவற நினைபவ ரடைவ துன்னையே. 25

ஒருமறை யநந்த சாகை கொண்டுன துருவ
மொன்றி, னருமையை யறிவிக் கின்ற வப்படி
யறிய வுன்றன், பெருமையை யறிவார் சாந்தி
பெறுபவர் பெருதா ரெல்லாங், கருமய லுறு
வார் சாந்தி கநவிலுங் காண மாட்டார். 26

ஆதி தேவ னீயு லக னைத்து யிர்க்கு மாதியா,
யீதெ லாம மைக்கு மண்ண லெல்லை யற்ற

வின்பமெய், போது மேவி யென்று மைம்
பு லப்ப டாதி ருப்பதோர், சோதி யாகி நித்த
முத்த சுத்த னுயி ருக்குமால். 27

படைத்தி நீய ளித்தி நீப டைத்த யாவு
முன்னிலே, யுடைத்தி நீயொ ருத்த னேயு
ணர்ந்து கொண்டி ருத்திநீ, யடைத்தி நீயு
ளத்திலேநி னன்பை யேயொ ளிக்குமா,
தடைப்ப டாம லென்று நின்ச ரண்ப ணிந்து
சாருகோம். 28

யோகி யாகி யுயிராகி யுணர்வா னுகி யிணை
யில்லா, வேக னுகி யிந்திரனு மரியு மயனு
மீசனுமாஞ், *சேகி தாவுந் தாதாவுந் தீயு
மதியுந் திநகரனு, மாகி வெவ்வே றனைத்
துருவு மானு யெனவே யறைகுவரால். 29

அகில வுலகு மிருப்பிடநீ யறிய வேண்டு
மக்கரநீ, சகல தருமங் களும்வளர்க்குந் தாய்நீ
புருடோத் தமன்றுனீ, புகலு மரிநீ பூமகனீ

* சேகிதா - தாதா என்றவை ஒவ்வொரு
தெய்வத்தின் பெயர்கள்.

புராரி நீயெப் பொருளுக்கும், பகுதி நீநீ
யொழிவின்றி நிலையாய் நிற்கும் பரம்பரநீ. 30

காரண மியாவையுங் கடந்திருள் கடந்துனைக்
கண்டவ ராதித்த, வருண மானசிங் மாத்திர
நேத்திர முதற்புலன் மநஞ்செல்லாப், பிரம
மேகமாம் புருடனோர் பிறிதிலாப் பெருமை
யாற் பேச்சற்ற, பரம மான்முதற் பகுதிநிர்க்
குணம்வெறும் பாழென நிகழ்கின்றார். 31

ஓது மொலியூறுருச் சுவைநாற் றந்தனக்கற்
றுதி முடிவில்பா மாயசிங் திதமாய்ப்
பூத மனைத்தினுக்கு முள்ளாய்ப் புறம்புமாஞ்
சோதி நினையறிந்தார் துஞ்சார் பிறவாரால். 32

எந்த யோகிகளு நாடு கின்றபர யோகி நின்
னடியி றைஞ்சுகோ, மந்த மாதியி லநந்த சக்தி
யுடை யண்ண னின்னடியி றைஞ்சுகோஞ்,
சந்த மின்னதென நாடு மாறரிய சம்பு
வேயடியி றைஞ்சுகோம், பந்த மொன்றில்பரி
சுத்த நற்பரம பாத பங்கயமி றைஞ்சு
கோம். 33

கூடுநின் றுருகு மிறைவநின் ஞானக் கூத்
தினைக் கண்டுகும் பிட்டே, நாடுபெங் சண்க
ளுன்றிரு மேனி யன்றிமற் றொன்றைய
நாடா, வோடுமிம் மநமு மொழிவற நிறைந்த
வுனையல தொருபொரு ளுணராப், பீடுறு
கமல மலர்ப்பதம் பணிந்தெம் பிறவிவே ரறுத்
தனம் பிரானே. 34

பவனே நின்னடி பணிசோம் பவோற்பவ
னேயடி பணிகோர், தவனே நின்ன்டி பணி
கோஞ் சங்கர னேயடி பணிகோ, மிவனே
யென்றிட விங்ங னெழுந்தரு ளுப்பே ரருளே,
சிவனே யெத்தே வர்க்குந் தேவே நின்னடி
பணிகோம். 35

காம னீறுசெய் கண்ணைவ ணங்குதுங்
கால னூறிய காலைவ ணங்குதும், சாம கீதனை
நாளும்வ ணங்குதுந் தாளி லெந்தலை யாரவ
ணங்குதுஞ், நாம ரூபம தின்றிய னைத்துமா
நாம ரூபனை நாளும்வ ணங்குதுஞ், சேம
மாகிய வீடரு ளெந்தையாஞ் சிவப்பிர காசனை
யென்றும்வ ணங்குதும். 36

உருப்ப நேகவித மாகி யோருருவ ளுமு
ருத்திரநி னுள்குவார், விருப்ப னேயவர்க
டற்பெ ரும்பிறவி வெந்து நீறெழவி ழிப்ப
தோர், நெருப்ப னேநினைவு றப்ப டாவொரு
நி ருத்த னேநிமல நெஞ்சகத், திருப்ப னேயி
றைவ னேசி வாயநம வென்று சேவடியி
றைஞ்சினர். 37

எந்தையள வற்றதிரு மேனியையி றைஞ்சிச்
சிந்தைகளி கூருமள விற்சிவனை நேரே
யந்தமறு தன்னையருள் செய்யவரு ளாலே
வந்ததிரு மேனியினை மாவினொடு கண்டார்.

அளவி றந்தவ னளவுபட் டிருந்தவவ் வருள்
கண், டுளம்வி யந்துநின் னுெப்பிலா வுருவு
கண் டுய்ந்தோங், களவொ ழிந்துளங் காதலிக்
கின்றதுன் கரைதீர், வளமை யின்னமுங்
கேட்கவென் றடிவணங் கினரால். 39

மேல தானதன் பெருமையைக் கேட்க
மேன் மேலுஞ், சால தாந்தவஞ் செயத்தகு
தபோதநர் தமக்குக், கால காலனெக் கடவு

ளுங் தொழுதெழுங் கடவுண், மூல மாதவன்
றன்முகம் பார்த்துமேன் மொழிவான். 40

5 - விசுவ ரூப அத்தியாயம் முற்றிற்று.
ஆசு விருத்தம் - 161.

---

6 - சிவ சத்தியின்
செய லுரைத்த அத்யாயம்.

காத லான்முநிவர் கேண்மி னென்
பெருமை காணு மாறருமை கண்டுதா, னேத
லான்மறையெ னுள்ள வாறறியு முறப விப்ப
துல கென்றனு, லீதெ லாமுநிலை பெற்றி
யங்குவது மென்றனு வழிவு மென்றனு, லாத
லாலழிவி லாத றப்பழைய னை நான்முழுது
மாகுவேன். 1

அகிலபூ தங்க ளுக்கு மந்தரி யாமி யாய்
நான், சகலபூ தமுமென் னுள்ளே சாரநான்
ருங்கி நிற்ப, னிகிலமு மதிலெங் கண்ணு
நிற்பவ னெனவு மென்னைப், புகலவும்

படாதே யென்னிற் பொருள்பிறி தின்மை யாலே. 2

செப்பிடவொணு தெதிர்தெரிந்திடவு முங்கட் கெப்படிநி கழ்ந்ததது வென்னுடைய மேனி யப்படியி ருந்தவெனை மாயையத ஞலே யொப்பிடநி னைந்திடுவ ரேயுணர்வி லாதார். 3

மேவியா தினுமுளனய் வியனுலகை நடத் துவனுன், ருவிலா வென்னுலே சகலகலை களுநடக்கு, மோவிலா வொருகூற்ரு லுண் டாகு முலகனைத்து, மாய்வதா மற்ருென்ரு லிருமையுமென் மாயையதால். 4

ஈங்காதி யிடைமுடிவற் றிருப்பேனென் மாயையினுற், பாங்காகப் பகுதிபுமான் பண் ணினன்முற் பவத்தாமா, ஞங்கார முதலாக வனைத்தும்விரிந் தனவத்ன, லோங்காரப் பொருளாமென் ஞெளியின்விரி வுலகெல் லாம். 5

கரியதாய் நின்றிவ் வுலகினுக் கெல்லாங் காலசக்கரந்தனை நடத்து, மிரணிய கருப்ப

ஞகுமார்த் தாண்ட னென்னிடைத் தோன் றின னென்ஞற், புரியும்வே தங்க ளுன்கையு மொன்ருய்ப் பொருளதாய்ப் புராணமாய்ப் புணர்தற், சரியதி லரிதா ஞானயோ கதையு மடியிலே யவற்களித் தனஞல். 6

எந்த நாளுமெனை யேநி னைந்தவியல் பாலே யென்னருளி ஞலயன், சந்த நாடரிய திவ்ய மாயெனது தன்மை தானவத ரிக்கிரு, னந்த மாதியிலென் னேவ லாலவனிவ் வகில லோக மும மைக்கிரு, னிந்த நாரணன ளிக்கு மாறு மிவ னென்னில் வேறெனவி லாமையால். 7

கடையுகம திற்கடிய் காலவந லாய்நின் றடையவமு ருத்திரன ழிப்பதுமென் ஞலே யுடையவலி யாலுலவு மூதையுட லுய்த்தே நடையைமுத லானவைந டத்துவது மென் ஞல். 8

தெய்வங் களுக்கும் பிதிரர்க்குஞ் செய்யும் பூசை யாகின்ற, வவியங் கவியம் பாகஞ்செய் தநலோ னளிப்ப தென்ஞலே, யுய்வந் திடுமா

றுதாத்தீ யாகு மவனுண் டனவெல்லா, மெய் வெந் திடாம லென்னியமத் தாலே வேவித் திடுகின்றான். 9

வருணனெனு மகிலசல பதியுமழை வா வுதவு; மருணனெனு முலகுதிகழ் வதுசெயம லனுமமிர்த, கிரணனெனு முயிர்மகிழ்வு கெழு மவருள் பவனுமெம, பரணமென விவரெனது பணிவகைசெய் தொழுகுமவர். 10

மிகப்ப யஞ்செயும ரக்கர் கோனிருதி யாகும் விண்ணவனும் வெவ்விதா,மகப்ப யன் றனைய ளிக்கு மந்தகனு மாட காதியள வற்ற தோர், சுகப்ப யன்செய்யள கேச னுமெனது தோழ னுஞ்சுருதி சொன்னவா, மகப்ப யன்ற னைய ளிக்கு மிந்திரனு மற்றெ னேவல்செய்து வாழ்வரால். 11

பொல்லாத பேய்களுக்கும் பூதங்க ளனைத் தினுக்கு, மல்லாத கணங்களுக்கு மதிபதியா கியவீச, னல்லார்க்கு நன்மைபெற நல்குவது

நாடொறுமென், சொல்லாலே மற்றவர்க்குச் சொல்லவேண் டுவதுண்டோ. 12

அருத்திசெய் தங்கிரா வடிவ ணங்குவோ னுருத்திர கணத்திலுத் தமனி யோகிகள் வருத்தம தொழித்துவாழ் வாம தேவனுந் திருத்தமா யென்னுடை யேவல் செய்குவார்.

தக்ககரு மங்களிலே நடத்துவதுஞ் சார்பி லர்பால், விக்கமளித் திடுவதுவும் விநாயக னென் னேவலினாற், செக்கநிறத் தமரர்கள்சே நாபதியாய் ஞானத்தான், முக்கியமா மறுமுக னென் னேவலையே முயல்கின்றான். 14

மதியி னுன்மிகு மரீசியே யாதியாய் மன் னுயி ரனைத்திற்கும், பதிக ளாகிய பதின்மரு முலகெலாம் படைப்பதென் பணியாலே, திதி செய் நாரணன் றேவியா கியதிரு செல்வநல் குவதென்றன், விதியி னுலென்றன் பணியி னுற் கலைமகள் விமலவாக் களிக்கின்றாள். 15

வேமெரி நரகி னுள்ளே வீழ்பவர் தம்மை யந்தத், தீமையி னின்று சாவித் திரியெடுப்

பதுவு மென்னு, லோமெனும் பொருளே ஞாந யோகியர்க் குமையாம் விஞ்சை, யாமக ளருளு மாறு மலகிலென் னருளி னுலே. 16

படவா வரசென் னேவலா லுலகம் பரிப்பதும் பரவையு ணின்று, வடவையுண் பதுமென் னேவலாற் பதினுன் மநுக்கள்பா லநமுமற் றென்னுற், சுடருடை யருக்க ருருத்திரர் வசுக்க டொன்மருத் துக்களச் சுநிக, டிடமுற மற்றுந் தேவர்க டத்தந் தேவையென் னேவலாற் செய்வார். 17

பொருவில் கின்னரர் கருடர்கிம் புருடர்சா ரணர்கந், தருவர் சாத்தியர் சித்தர்விச் சாதாரியக்கர், வெருவ வந்திடு மரக்கர்வே தாளபூதங்க, ளொருவ ரிங்கொழி யாமனுன் விதித்தவா றுறைவார். 18

நிகழ்ந்திடுங் கலைகள் காட்டைக ணிமிட நீதிசெய் சாந்திநாண் முகூர்த்தம், பகர்ந்திடு மிருது வாண்டுமொ தங்கள் பக்கங்க ளென் விதிப் படியே,யுகங்களு மநுக்கட் குள்ளவெல்

லைகளு முறைத்திடு பரா * பரார்த் தங்க, ணிகழ்ந்திடுங் கால பேதமியா வையுநா னியமித்த படியிலே நிலையாம். 19

உற்பவச ராசரவி யோநியொரு நாலும்
பற்பலவ தாகமொழி பாதலம னைத்து
மெப்புவந மும்பிரம ரண்டமவை யாவும்
மிப்படியி ருக்குமது வென்றனிய மத்தால். 20

அந்நிய மின்றி யென்னிலே தோன்று மநந்தபிங் நாங்மக மாயென், றன்னிடை நிகழும் பிரமரண் டங்க டனக்கொரு முடிவுதானிலதான், முன்னிறந் தனவு முடிவிலை யென்பான் முளைத்திடப் படுவதப் படியே, யென்னிய மத்தாற் றோற்றமு நிலையு மிறுதியும் பெறுவதிங் கெல்லாம். 21

பூத மைந்தி னுடுமநமும் புத்தி மமதை பூதாதி, யாதிப் பகுதி யென்னியமத் தாலே யென்பா லாயிருக்கு, மோதி வந்த வனைத்

* பரார்த்தம் பிரம கற்பத்தின் அரை.

திற்கு மியோகி யாகி யுளமாயை, பேதஞ்
செய்வ தென்னேவ லாலே யன்றிப் பிறி
தில்லை. 22

ஆகமெடுத் தவர்க்கெல்லா மதிபதியா மாந்மா
வாம், போகநுகர் பரம்புருட னென்னேவல்
புரிகின்றான்,மோகமெலா மறமாற்றி முடிவில்
பரமாநந்த,வேகவெனைத் தரும்விஞ்சை யென்
னருளா லியங்குவாள். 23

பலவுரை செய்குவதென் பலபா சத்தியினு,
லுலகமெ லாமெனிலே யொழுகவெ னுள்
ளொழியத், துலகுப ரப்பிரம மாகிய சோதி
யதா, யிலகுவ னுனெனில்வே றில்லையோ
ரந்நியமே. 24

தொல்லை யுள்ளவென் சோதியைச் சுத்தமா
நல்ல வன்பொடு நானுமக் கோதினே
னெல்லை யுண்மையு ணர்ந்தவர்க் குற்பவ
மில்லை யில்லையென் றீசனி யம்பினுன். 25

6-சிவ சத்தியின் செய லுரைத்த அத்தியாயம்
முற்றிற்று.

ஆக விருத்தம் - 186.

7 - தத்துவ நிசம் விபூதி அத்யாயம்.

அநிய மானதற் றறிகு வார்கள்பின்
செனியு ருதவா திகழுந் தேவனுந்
தனிய னுனவென் றன்மை யோதநான்
முநிவர் கேண்மெனு முதல்வ னேதுவான். 1

சிரந்தந மாய்மிகத் திரமாய்ச் சிற்சுகந்
தரந்தனு ருவாயவி கார மாய்ச்சதா
நிரந்தர மாகிநிட் களமாய் நித்தமாய்ப்
பரம்பர மானதென் பழைய தாமமால். 2

சங்கரனு னுருத்திரரி லியோகிகளிற் சம்பு
நான், பங்கமில்சீர் வசுக்கடமிற் பாவகனு கின்
றேனுன், மங்கையரின் மலைமகளுன் வலியவ
ரில் வாயவுநான்,சிங்கமிரு கங்களினுன் றிநக
ரரில் விண்டுவுநான். 3

இந்திரனு னிமையவரி லியக்கரில்வச்சிரவ
ணனுன், சந்திரனுன் ருரகையில் விரதத்திற்

சத்தியநா, னெந்திரத்தில் வில்லுநா னிலங்கி
யசா வித்திரியா, மந்திரநான் மந்திரத்தின்
மாதவரில் வசிட்டனுன். 4

ஞானமதி லென்னுடைய ஞாநநா னன்றுன,
யானையயி ராவதநா னுச்சிரமத் தில்லறநான்,
கானமுறு பறவைகளிற் கருடனுன் கதிய
தனி, னீனமிலா முத்திநா னிராக்கதரி னிரு
திநான். 5

எண்ணுமதிற் காலநா னெல்லையிலா மாயை
பல, பண்ணுமவர் களிலரிநான் பாசத்தின்
மாயையுநான், புண்ணியமாந் தீவுகளிற் புட்கர
நான் பூதத்தில், விண்ணுநான் றத்துவத்தின்
மிருத்தியுமா கின்றேனுன். 6

சித்தர்களிற் கபிலனுன் றேசங்க டனிற்
பிரம, மத்தனு மீசர்களின் மகேசனுன் மறை
கடமி, லுத்தமவோங் காரநா னூர்களில்வா
ரணுசிநான், றத்துவஞா நிகடம்மிற் சதுர்
முகனு கின்றேனுன். 7

கற்பங் களின்மா கற்பநான் கணேசர் களி
லே விநாயகனுன், சர்ப்பங் களிலே யநந்தனுன்

சாயம் புவுநான் மநுக்களிலே, வெற்புக் களின்
மா மேருநான் விசுவ கன்மா நானெனலாஞ்,
சிற்பஞ் செய்ய வல்லவரிற் சேநா பதிக ளிற்
குசனுன். 8

ஏவ லார்களி லிராம னுனசுரர் தங்க ளிற்பிர
கலாதனுன், மேவ லாரகல வெல்லும் வீரர்
களில் வேளும் வீரபத் திரனுநான், றுவில்
சாமமறை தன்னி லத்தின்மிகு சேட்ட சாம
மது தானுநா, னேவி லாதடைவி லேசு ழன்
றிடுமு கங்க ளிற்கிருத யுகமுநான். 9

தக்க பிரசா பதிதம்மிற் றக்க னுனெக்
கணங்களினும், விக்கி நவிநா யகனுன்றுன்
வியாத னுன்மெய்ம் முநிவர்களிற், றெருக்க
சூத்தங்களிர்புருட சூத்த மாவே னுன்சோதி,
மிக்க விஞ்சை யாவையினுந் தன்னை யறியும்
விஞ்சைநான். 10

ஒன்ன வர்த்தெறு மாயு தங்களி லோங்கு
வச்சிர மாவனுன், பன்னு மெவ்வுல கங்க ளிற்
பரமேச ரிற்பர மேசனு, னின்னு மிங்குல

கிற்சி றந்தன யாவை மற்றவை யென்னதா, மன்னு சோதியில் வந்து தித்தன வென்ன வேமநம் வைம்மினீர். 11

எந்தப் பிராணி களுப்பசுக்க ளென்னப் படுமிங் கதிபதியான், பந்தப் படுக்கு மென் மாயா பாச மதனுற் பசுபதியாய்த், தொந்திப் பதுவீழ்ப் பதுவாமித் தொழிலென் வினை யாட் டெனையன்றி, யிந்தப் பசுக்கள் கட்டு னர்க ளில்லை யவிழ்ப்பார் களுமிலதால். 12

ஊறதாம் போகமே யூட்டி விட்டிடப்
பேறதா யுயிர்களைப் பிணித்த மாயைதன்
கூறதாங் கணங்களாற் கூறப் பட்டநா
லாறதாம் பாசம தறியக் கூறுவாம். 13

மநம்புத்தி மமத்துவம்வான் வளிதீநீர் மண் ணெட்டு, முனையுற்ற பகுதிகளா மூக்குவிழி செவிநாமெய், பனவுற்ற வாய்கைகால் பாயுரு பத் தஞ்சத்தம், தனுவுற்ற லுருச்சுவைநாற் றங்களெனுந் தத்துவமும். 14

ஆகவிவை யிருபத்து மூன்றிவற்றுக் காதி தா, ளுகியநா தியதாகி யகிலத்தின் காரண மாய், மோகசமு சயகுணமாய் முதற்பகுதி தெரியாமை, யேகமுமாந் தத்துவங்க ளிருப துட னீரிரண்டாம். 15

ஒத்தமுக் குணங்களாம் பகுதி யுத்தமஞ்
சத்துவ ஞானமாந் தமமஞ் ஞானமா
மத்திமங் கலப்பதா மற்றிம் மூன்றையும்
புத்தியின் விகாரமே புலப்ப டுத்துமால். 16

தரும பாவமி ரண்டுளே தப்புதற்
கருமை யாகிய பாசம தாகிலு
மிருமை யாதர வின்றியெ னக்குநேர்
கரும முத்தியின் காரண மாகுமால். 17

அறியாமை காமம்வெறுப் பாமாசை யகஞ் செறிதற், பொறியாகப் புகுந்தொருவர் போக் கரிய பாசமிவை, முறியாத வினைத்தளையான் முடிச்சிட்டே யென்மாயை, பிறியாதென் பாலுளதாம் பிறவிகளுக் கடியாக, 18

பின்னிய பகுதியாம் பிரதாந மாயையு
மன்னிய புருடனு மானு மாதியாய்த்

துன்னிய விகாரமுந் தொல்லை யீசனி
லந்நிய மின்மையா லவனே யாகுமால். 19

அவனே பாச மவனேகட் டுண் டவனே
கட்டு மதிபதியு, மவனே பசுக்க ளாகின்று
னனைத்து மாகி யுள்ளானு, மவனே யவனை
யொருவர்களு மறிவா ரில்லை யனைத்திற்கு,
மவனே யநாதி புருடனென வவனை யறிவா
ரறைகுவரால். 20

7 - தத்துவ நிசம் விபூதி அத்தியாயம்
முற்றிற்று.
ஆக விருத்தம் - 206.

---

8 . பிரபஞ்ச சர்வகாரண புராண புருஷப் பிரதிபாதநம்.

வருந்தியு மறைகளீ றறியு மன்னுயி
ரிரும்பவக் கடல்கடந் தேற வுய்ப்பதாங்
திருந்திய வுணர்வது செப்ப வின்னமு [ன்.
மருந்தவர் கேண்மினென் றருளிச் செய்குவா

பகருபா மீசன் வெறுமொருவ னீறில்
பரமனெனு மாதி பகவனு, னிகரில்ழி யாத
பிரமமய மாகி நிமலநிலை யேயெ னுழிவுருக்,
ககநவடி வான பிரமமெனி வியோநி கருவை
யுற மேவி விடுவனு, னகிலசக மாக வறிவரு
மென் மாயை யெனவிதைய னுகி யமருமால்.

சென்மா தியதாம் பகுதிபுமான் சிறந்த
மான்பூ தாதிமநந், தன்மாத் திரைகள் பேதங்க
ளிந்தி யங்கள் சமைத்ததனுற், பொன்மா
விரவி பலகோடி போலு மண்டம் போதா
னே, டென்மா சத்தி யெல்லையிலா வுயிரு
முளதா யிழைத்திடுமால். 3

எந்தயோநி யிற்பிறப்பா ரியார்க்குந்தா
யென்மாயை, தந்தையா னெனவறிவார் சநந
வினை தப்புவரா, லெந்தையா யெனையறியா
திருப்பவரென் மாயையினுற், பந்தமா மியோ
நிதொறுற் பவித்திறந்து பதைப்பர்களால். 4

பாங்காய விச்சைகட்கும் பகர்பூத மனைத்தி
னுச்கு, மீங்காரு மிலரிறைவ ரென்னையலா

லியானேயா, நீங்காத வதிபதியாய் நின்றுல
கம் படைக்கின்ற, வோங்கார வுருவான பிரம
மென வுள்ளேனும். 5

பொன்றுகின்ற பொருள்கடொறும் பொன்
ருதே புரையறநா, னின்றதறிந் தவனென்
னை நேராக வறிகின்ரு, னன்றியுமிங் கவன்
றன்னைத் தன்னாலே யறிந்தழியா, தென்று
முள பரமபத வின்பமடைந் திடுகின்ருன். 6

சங்கையறத் தத்துவங்க டன்னுடைய நுண்
மையுமென், னங்கமென மொழிகின்ற வாறி
னையு மகிலத்தின், பங்கமறு பகுதியுமப் பகு
திவிநி யோகமுமென், றிங்கெனது நிலை
யறிந்தா னென்னையடைந் திடுகின்ருன். 7

இறைவனுக் கநாதியா யிலங்கு போதமு
மறிவது முழுதையு மநந்த சத்தியு
நிறைவொடு சுதந்தர நித்த சத்தியென்
றறைவர்க ளறிபவ ராறு மங்கமாய். 8

நுண்ணியதத் துவங்களென் னுவல்வனதா
நுகர்சீவன், வண்ணமிலா மநமொடுதன் மாத்

திரைகண் மற்றெதுக்கு, மெண்ணுவதா
மிவையடியா மியாதினுக்குங் காரணமாய்ப்,
பண்ணுவது பகுதியதன் விநியோகம் பந்தம
தாம், 9

ஆரண மந்த வுண்மையிற் கரப்ப தாகு
மென் றறைந்திடப் பட்ட, வோரண வின்றி
யுள்ளவெப் பொருட்கு மியோநியா தொன்ற
திவ் வுலகின், காரண மந்தப் பகுதியி லத
னைக் கடந்துமே லாகுமொன் ருன, பூரண
மான மகேசனென் றுரைக்கும் பொய்மைதீர்
பரமனும் புருடன். 10

மோக மாமுலக முற்றி னுக்குமொரு மூல
மானதெரி யாமையும், போகு மாசெயும்வி
ருத்தி யும்பொருள னைத்தை யுந்தருபு ராண
னு, யேக னுகியிறை யாகி வானமென வெங்கு
முள்ளபர மீசனு, மியோகி யாயுளவொ ருத்த
னேயெனவொ ருக்கி'மாமறையு ரைக்குமால்.

பாக மென்பர் பகுதிப்ப ரமனே
டேக மென்பர் சிலரனு வுக்கனு

வாகி மற்றது மப்படி யாமென்பர்
யோகி யுள்ளதெ லாமென்ப துண்மையாம்.

என்னையுற நினைப்பவரி லெங்கேனு மொருவனவன், றன்மதியைக் கடந்தருளாற் றன்னிதயக் குகைதன்னிற், பொன்மயனாய்ப் புராணமாம் புருடனாய்ப் பொருந்துமேனி, லங்கியம தறவறிவா னவன்பரமத் திடையடைவான். 13

8-பிரபஞ்ச சர்வ காரண புராண
புருஷப் பிரதிபாதந அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் - 219.

9-மாயா விகார அத்தியாயம்.

நின்மலமா யவிகாரி வேறுபடா நிட்களனாய்ச், சின்மயனாய் நித்தனாஞ் சிவனேநீ செகத்தான, தன்மையினை யருளென்னத்

தபோதநரோர் தினையொழிய; வின்மையினா னப்பரிசை யின்னமவர்க் கெடுத்துரைப்பான்.

என்னொழிய வில்லைசக மியானவ்வுருவல்லே, னுன்னிலொரு மாயையுல குக்குமுத லாகு, ஞன்னுருவ மானவெனை யன்றியது நாளுந், தன்னியல்பி னானிகழ்வு றத்தகுவ தன்றால். 2

யாதொன் றுருவ ராலேனு மறியப் படாத வியல்பாமென், னுதி முடிவின் றியசத்தியந்த மாயை யதனாலே, பேத வுலக முண்டாகிப் பிறங்கு மதனாற் பிறர்க்கென்றும், போதப் படாத வென்னாலா யுள்ள பொருளிப் பொருளெல்லாம். 3

சோதியா நந்த மாகுந் தோன்றிடா வேறேதொல்லை, யாதிகா ரணமா மென்றே யறைவர்க ளறிய வொன்றாய், நீதியாய்ப் பரமாநந்த நிமலமாம் பிரம நானே, பேதியா வென்னில் வேறுண் டாவது பிறிதொன் றில்லை.

அன்றி யின்மைய றிந்தவ ராதலா
லென்று மிச்சகந் தானது மியானென
வொன்று மாகியு லப்பில னைத்துமாய்
நின்றல் கண்டிவர் நிச்சயித் தார்களால். 5

சிந்ம யாநந்த மாய்த்திகழ் கின்றதோர்
தன்மை யாய்ப்பர மாகிய சாந்தமாய்த்
தொன்மை யானசு டரால்வி காரமொன்
றின்மை யாமெனக் கேதமொன் றில்லையால்.

எனந்த மற்ற வேக மேனி யெண்ணில்
பேத மாக்கவற், றநந்த சத்தி யென்னி
லேய வற்றின் மாயை யாதியா, வனைந்த வந்த
மாயையான் வானி லேமநத்தினு, னினைந்தி
டப்ப டாத வவ்வி யத்த மாகி நிற்பனுன். 7

சத்தியொன் றாலே யானுந் தக்கசா யுச்ச
மான, முத்தியுண் டாகு மொன்றான் முழுதி
செல் வழுமுண் டாகுஞ், சித்தியா நிற்ப
தெல்லாஞ் சிதையுமொன் றாலே யெல்லா,
நித்திய மாக வென்ற னியமத்தா னிகழு
மன்றே. 8

மத்தியமாய்ப் பரஞ்சுடரா மண்டலத்தான்
மண்டிதமா, யத்தகுமக் கரமாகி யறிவரிதா
மநாதியாம், வித்தகமாம் விட்டுவின்மெய்ப்
பரமபதம் விச்சையெனுஞ், சத்தியினு னிகழு
மிது தக்கோர்க ளறிவர்களால். 9

உடுக்கு மாடை யினைப்போல வுலக மியா
தொன் றிற்குறுக்கு, நெடுக்கு மாகு நிகிலமு
மாய் நினைத்தற் கரிதா மியாதொன்றின்,
மடக்கும் வாக்குத் தான்செல்ல மாட்டா
மையினுற் பவக்கடலைக், கடக்கும் பிரம
வாநந்தங் கண்டா னடுக்கங் காணுனல். 10

ஈநஞ் செய்யு மஞ்ஞான விருளைக் கடந்து
மேலான, பாநந் தனக்கே யுளதான பரம
வொளியாம் பரம்பரனை, ஞாநந் தன்னுல்
வேறறவே நானென் றறிந்த நல்லோனவ்,
வாநந் தமதாம் பிரமமய மாகி வீடே யடைகின்
றுன். 11

ஒப்பதுமிக் கதுகுறைந்த வொன்றுதனை
யொழித்தில்லா, தெப்பொருளெவ் வொளி

கட்கு மெவ்வொளிதா னொளியாகுஞ், சிற்
பரமா காயத்தே திகழ்கின்ற வதுதெளிந்த,
வப்பெரியோ னுந்த மாய்ப்பிரம மாகின்றான்.

உலகங்கண் முழுதுந்த னுளம்தன்ன வுளதா
யலகின்றி யழிவின்றி யறிவின்றி யமிர்தா
யெலயொன்று மறநின்ற பரவின்ப மதிலே
நிலநின்ற வவனின்ற நிலயென்று மழியான்.

புன்மய கோசமுள் புக்கொ ளிக்குளே
நன்மைய தாகிய ஞாநக் கண்ணினுற்
சின்மய மாய்த்திகழ் தேசை நோக்கிய
தன்மையால் வியோமநற் றுமங் காண்பரால்.

அப்பரந் தன்னைத் தன்பா லநுபவித் தநுப
வித்தா, ரெப்படிக் கண்டா ருள்ளத் திலங்
குமா முனிவ ரந்தச், செப்பரு மின்ப மாய்த்
தன் றேசினுற் றிகழ்ந்து தன்னே, டொப்
பறு மவனே யார்க்கு மும்பனென் றுணரப்
பட்டான். 15

எங்குமுள னுயிறையா யேகனு யெல்
லாப்பூ, தங்கடோறு மறைந்திருக்குந் தன்மை

யனுய்ச் சராசரங்கட், கிங்குயிரா யுள்ளாகு
மிறைவனொரு வனையுமறிந், தங்கடைவார்
சாந்தியினை யடைவரல்லா தவரடையார். 16

முகமொடு கிரிவந்தன் முடிபத முடிவின்
றாய்க், குகைமுழு தினுநின்றே குறைவற
வுலகெல்லா, மகமொடு புறமேவுற் றழிவறு
நிலயாகும், பகவனி லயலாகப் படுவதோர்
பொருளின்றால். 17

மாசுடை மநத்தர் தம்மின் மறைப்பதாய்
மாசி லாத, தேசுடை யோகி கட்குத் தெரிந்
திடப் படாத தான, வீசனு னெனதா ஞாந
மிப்படி யருளி னுலே, பேசின னுங்கட்
கென்று பெருந்தகை யருளிச் செய்தான். 18

9-மாயா விகார அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம்-237.

10-தத்துவ தரிசந அத்தியாயம்.

துக்காங் குறியில்குறி சூக்கசூ சனைதெரியி,
லக்கணஞ் சகலவுல கத்தினங் குாமுமதவ்,
வக்கரம் பரமபத மப்பாஞ் சுடர்பிரம, நிர்க்
குணம் பரவெளியி னிச்சயம் பெறநிகழும்.

ஒப்ப ரும்பர தத்துவத் தொப்பி டுஞ்சுரு
திக்கலை, கப்ப றும்படி புத்தியிற் கற்பி தங்
கள்க ழற்றிமெய்த், தப்ப ருந்தவர் சித்தமெய்
தற்ப ரந்தனி லற்றதிங், கப்ப ரம்பிர மத்தி
னுக் கத்தை லிங்கமெ னப்படும். 2

அறிவினிற் பிறிதெல்லா மறிவென லறி
வாகும், பெறவரி திதிலல்லாற் பிறிதினில்
வெளிநில்லேன், பிறவிய தறுஞானம் பெறவரி
ததனுலே, மறவிய துறுமாயா மயலல திலை
யெல்லாம். 3

நின்மல மாகிநி ரஞ்சந மாய்வே
றின்மைய தாயவி காரமி தாமித்
தொன்மைய தாகிய சூக்கும ஞாந
மென்மல மில்லுரு வென்பா றிந்தோர். 4

யோகிநி லுளமென்பா லொருபடி யுற
வைத்தே, யேகவெ னிலைகண்டா ரவரென
தியல்கண்டார், பாகம தறுமொன்றும் பல
வுரு வமுநானே, யாகவு மெனையன்பா லறி
ஞரு மயலன்றல். 5

பேறுறு பிரமாநந் தமுமது பெறுதாமும்,
வேறுற வறிகின்று ரவர்விழி மறைகின்றார்,
கூறற வவிகாரங் கூடிய விறைதாமா, யூறற
வுணர்கின்று ருண்மையை யுணர்கின்றார். 6

பங்கமில்சீர் பரனுடைய தாதித்தன் பான்
மையினை, யிங்கொருவர்க் கறிவரிய தாகியதவ்
வியத்தத்தை, யெங்குமுள தாய்த்தம்பா
விலங்கியபே ரின்பத்தைத், தங்களிலே நிலை
பெற்ற சாந்தரடைந் திருப்பர்களால். 7

மெய்த்தக வீடிது விமல மாய்ப்பரி
சுத்தம தாகிநிர்த் தொந்த மாயொரு
பெத்தமில் பிரமரூ பத்திற் பேதியா
வுத்தம மெனதுசா யுச்ச மென்பரால். 8

ஆதியு நடுவுமந் தமுமி லாதவொ தான்
றேதது வெனிற்பர மீச னானநா
ணீதியி லெனையறி நிமல நித்தனும்
பேதமி லெனைப்பெறும் பிறவி பின்பெறான்.

தபநனொளி பெருகிரவி சசியுடமி னடை
யச், சிவனிகழ்வி னிகழ்வுபெற சிறிதுமிவர்
நிகழா, ரவனுடைய வொளிகொடொரு
வொளிதிகழு மசையா, விவனதொளி சிறிது
பெறி விவர்நிகழ்வு பெறுவார். 10

உதியாம லென்று மொழியாமை நின்ற
வொளியாகி யென்று முளதாய்த், திதியாய்நி
றைந்து தெளிவாகி யங்கோர் செயலான
தின்றி யருளான், மதியாளர் தங்க ளகமேய
கண்ட வடிவாய்நி கழ்ந்த வடிவே, பதியாகி
யென்று மழியாமை நின்ற படியாகி நின்ற
பரனான். 11

நித்தம நந்த நிட்கள மின்ப நிமலஞ்சற்,
சித்தமு தந்தற் சிவமெனும் வேதத் திரளெல்
லாஞ், சுத்தனை யந்தச் சுருதியி னந்தத் துணி

நெஞ்சத், துத்தமர் தந்த முளமது ணர்ந்தா
ரோமன்றே. 12

தாரா காயம் பவநம்புத் தாநன லல்லனீ
ராதார, னோரா தான பிராணாதி யெல்லா
வாயுவி னுருவல்ல, னோரா காசன் மநம்புத்தி
யுறுமொரு சேதந மவனல்லன், பாரா காச
யோகத்தில் கேவல னாகும் பரமீசன். 13

எல்லாவே தத்துமறைந் திருப்பதுவா
யாவர்க்குஞ், சொல்லாத பரஞாந முங்களுக்
குச் சொன்னேனா, னல்லானிப் பரயோக
ஞாநத்தா லேநலிவொன், றில்லாத விடத்
தடைவா னெனவியம்பி யருளினான். 14

10 - தத்துவ தரிசந அத்தியாயம் முற்றிற்று.

ஆக விருத்தம் - 251.

11 - யோக அத்தியாயம்.

இடர்ப்படு பிறவி தீர்க்கு மியார்க்குமெட்
டாத தாகி, யுடைத்தன தொளியி னாலே
யொளிர்வதா யுள்ள ஞானச், சுடர்த்திரு வுருவ
மான சொரூபனே யாதொன் றாலே, கிடைத்
திடு மந்த யோகங் கேண்மினென் றருளிச்
செய்தான். 1

யோக வெரியோ ரிமைப்பிலே யாது
வினையு மெரிப்பதாந், தேக மொழியுமிம்
முத்தியே சேரு முணர்வு செநிப்பதா,
மியோக முணர்வை யொழித்துரு யோக
மொழிய வுணர்ச்சிதா, னகு தலவீ துளத்
துளா னியாவ னவனே யளிப்பனுன். 2

ஒருகா லிருகான் முக்கான்மற் றுள்ள கால
முள்ளத்தை, வருகா தலினு லியோகத்தே
வைப்பார் மகேச ரெனப்படுவா, ரரிதா மிதனே
மாயோக மபாவ யோக மெனவறிஞ, ரிருபா
லாக வியம்புவரவ் விரண்டு மிருக்கும் படி
கேண்மோ. 3

தானினைய்யு மாறரிய தத்துவமி யாதொன்
றுனிகழ்வ தாகுமது பாவமெனு மியோகம்
வானியல தாகியொரு வத்துவுமி லாதாஞ்
சூநியம தாகவறி கின்றனர்க டுயோர். 4

மயலிலா யாதிலொரு மலமிலா தானசுக
வடிவதா மாசி லொளியா, மயலிலா வேக
வெனே யயலெனு தேகமென வறிகைமா
யோக மதுவா, முயலுமா றுசையென முடி
விலா நூல்கள்பல மொழியுமியோ காட
வியெலா, மியலுரு தாமரிய விதனிலோர்
சோடசியு மிசையுரு தாகு மியல்பால். 5

சுத்தமா யென்னைக் கண்டெத் தோற்றமுந்
தோன்று தான, வுத்தம யோக மெல்லா
யோகிலும் பரம யோக, மத்திற மின்றி
யென்னே யாயிரங் கோடி காலஞ், சித்தம
தொருக்கி நாளுஞ் சிந்தையிற் றிகழக் காணுர்.

அயர்வறு யோகலா தறிகை யாதந
மயலற விந்திய மடக்கல் வாயுவின்

சயமிகு தியாநதா ரணைச மாதியு
மியமமு நியமமு மெட்டு மங்கமாம். 7

தருக்கி லாதபி ரமச்ச ரியமெய்
யுரைக்கை கள்ளமொ ழிகையின் ஞ்செயா
திருக்கை யாதொன்று மோராமை யென்றிவை
சுருக்க மாகய மமென்று சொல்வரால். 8

மநத்தால் வாக்காற் காயத்தால் வாதை
யாவ தியாதேனு, மனைத்தா ருயிர்க்குஞ்
செய்யாத தகிஞ்சை யாக வறிகவிது, தனிற்
றுன் பரமாந் தருமமிலை சாரு மின்பந் தானு
மிலை, யெனைத்தாம் விதியி லுயிர்க்கின்னு
செயினு மதுவு மினிதேயாம். 9

உளவாறுரை செயருனுரை செயுமாறெருழூ
குதருன், வளவாய்மைய தெனநாடினர் மதி
யான்மிகு முதியா, ரளவாரகி லமும்வாய்மையி
லுளதாதலி னதுதா, னுளவாசக வினையா
லுடை யவனியாவையு முடையான். 10

மறைவினி லாகினும் வலியினி லாகினும்
பிறர்பொருள் வவ்வுதல் பெரிய கள்ளமாங்

கறையுறு மரிவையர் திறங்க ணவிலும்
பிறழ்வற மறப்பது பிரம சாரமாம். 11

அரந்தைமுழுந் திடவாபத் தடைந்திடினு
மன்பாலே, யிரந்தொருவ னீந்திடினு மோரா
மை யோராமை, வருந்திமநத் தாசையற
மடக்குவான் மாசற்ற, நிரந்தரமா மியமமிவை
நியமமினி நிகழ்த்திடுவாம். 12

படர்தவம் வேதநூல் பயிறல் பத்தியாற்
கடவுளை வழிபடல் கருதி நெஞ்சினே
டெலுறு தூய்மைசந் தோட மோங்கிய
சுடர்மிகு நியமமாய்ச் சுருங்கச் சொல்வரால்.

பவமார் நோவு கெடநோன்பு பலவா லாக்கை
மெலிவிக்கை, தவமா குவது வேதாந்தஞ் சத
ருத் திரியந் தாரகமாஞ், சிவமா கியமந் திரம்.
பலவின் செபமத் தியாநஞ் சிறந்துள்ள, வவமா
னதிலா வதன்பேத மறிவா ரறையும் படி
கேண்மோ. 14

வாசிக முபாஞ்சு மாநத மென்று மதிலொ
ரொவ் வொன்றினுக் கொன்று, தேசுடைத்

தென்று செப்பினர் பிறர்க்குத் தெரியவே
செபித்திடுஞ் செபந்தான், வாசிக முபாஞ்சு
வாயித முடித்தன் மாத்திர மாநத மடங்கி,
யாசறச் சிந்தை செய்தலொன் றினுக்கொன்
ருயிர மடங்குநல் லனவாம். 15

கூடின கொண்டலம் பாவங் கூடல்சந்
தோடமென் றறிஞராற் சொல்லப் பட்டதா
லாடுறு தூய்மைதா னகம்பு றம்புள
தோடம திரண்டையுந் துடைத்தலென்பரால்

தோயமு மண்ணுமாக் கொண்டு சுத்தமாக்
காயமே வியமலங் கழுவப் பட்டதாம்
வாய்மைய முதலதா மநத்தி னூற்செயுந்
தூய்மையை யுள்ளநற் றூய்மை யென்பரால்.

கந்தநன் மலர்கொடு காய பூசனை
வந்தனை செயல்புகழ் வாக்கின் பூசனை
பந்தனை யறமநம் பத்தி யாற்செயுஞ்
சிந்தனை நியதமுஞ் சிவன்றன் பூசையே. 18

புராதநரோ தியவியம நியமங்கள் புகன்றன
மேற், பிராணனதின் யாமமது பேசுபிரா

ணயாமம், விராவியுட லுறும்வாயு விளம்புவர்
கள் பிராணனென்ன, நிரோதநமே செயலதனை
நித்தலுமா யாமந்தான். 19

மந்த முத்தம மத்திம மென்றுமிங்
சந்த நல்லுயிர் யாமம றிபவர்
சந்த முற்றச கற்பவ கற்பமாய்ச்
சிந்தை யுற்றிரண் டாகவுஞ் செப்பினர். 20

மந்த மாறிரு மாத்திரை மத்திமோத் தமங்க,
ளந்த வெல்லிரட் டிரண்டுடன் மாத்திரை
யடக்கல், கந்த வேர்ப்புறுங் கம்பநங் கிளம்
புகை யிவையா, னந்த மாச்செயு மொன்றினுங்
கொன்றுநன் மையதாம். 21

அகற்ப மல்லதா மந்திர மகத்திலே யானவா
யாமந்தான், சகற்ப மாம்வியா கிருதியோங்
காரஞ்சா வித்திரி தனைமுக்கால், வகிக்கு மெல்
லையா மிடம்வலம் வழங்கிய வாயுவை வலமாக,
முகக்க வென்றறிந் தவரியோ கத்திலே முயன்
றிட மொழிந்தாரால். 22

ஏசது ருமலி டத்தில்வ ழங்குகை
மாசது ருமல்வ லத்தினில் வாங்குகை
யாசத றத்திதி யாகவ டக்குகை
ரேசக பூரக கும்பக மென்றார். 23

இந்திய மீட்சி தானே யிசைந்திடும் பிரத்யா
காரங், கந்தர மிதய நெற்றி கபாலநா பிகளி
லொன்றிற், சந்ததஞ் சிந்தை வைக்கத் தாரணை
தரித்த தேக, சிந்தனை யொழுங்கொன் றோடே
சேர்ந்தது தியாந மாமே. 24

ஓதுமா லம்பந மொன்று மின்றியே
போதமும் போதகப் பொருளு மென்றுணர்
பேதம தன்றியே யிருந்த பெற்றிநற்
சாதந மாகிய சமாதி யென்பரால். 25

தாரணை யாயா மத்திற் றகுதிபன் னிரும
டங்காந், தாரணை தன்னிற் றியாநந் தானுமப்
படியே நன்றாந், தாரணி தன்னின் ஞாந சாதந
மாஞ்ச மாதி, யோரணி தியாநந் தன்னி லேற்
றமிப் பரிசே யென்பர். 26

விவத்தி தம்பெற்றி ருக்கைவி ரைந்தெழுங்
கவற்றி தீர்வுறக் கற்பித்த வாதந
மவற்றி னெல்லைய றைவரி தந்தநற்
சுவத்தி கம்பத்ம மியாதினுந் துய்யவாம். 27

இருதுடை மேலே யீரடி யேறும்
பரமவி ருப்பது பதுமம தாகு
மொருபத மேலே யொருபதம் வைக்க
மருவவி ருப்பது மத்திம மாகும். 28

தடித்த வூருசா னுக்களின் சந்தற
மடித்த வந்தராத் துள்ளேம றையவைத்
தடித்த லங்கள்செவ் வேசெல வாங்குறத்
தொடுத்தி ருத்தல்சு வத்திக மாவதே. 29

நீரினாற் செழும்ப தானவவ் விடங்க
ணெருப்பினால் வெந்தவவ் விடங்க, ளூரு
செந் துக்க டெற்சநர் திரால ருதிர்ந்திடு சருகு
புற் றிடங்கள், கோரமாம் பயங்க ளுள்ளிட
மிடிந்த கோயினாற் சந்திகண் மயாந, மாரவா
ரங்க ளுள்ளிட மசுத்த மலக்கணா மநத்தினுக்
கதனால். 30

வருத்தமா யுடல வாதையைப் பற்று மநமது நடுநடுங் கிட்டுப், பொருப்பினிற் குகைகள் புண்ணிய தேசங் கோயில்க ணதிகளின் கரைக, ளிருப்பறு மனைதா னூர்வது கடிப்ப தின்றியே காந்தமா யுள்ள, வொருத்தரு மறியா விடத்திலே யென்னை யுன்னுவான் மநனொருப் படுவான். 31

உன்னரு மியோகொருப் படுவன் முன்னரே
யென்னருள் பெற்றயோ கீசர் தம்மையுஞ்
சென்னியால் விநாயகன் றனையுந் தேசிகன்
றன்னையு மென்னையும் வணங்கிச் சாருவான்.

தனியி லிருந்து பயமின்றிச் சாந்த னாகித் தனக்கிசையு, முநிவர் மொழியு மாதநங்கண் மூன்றி னொன்றி லேமூக்கி, னுனியைச் சிறிதே கண்விழித்து நோக்கி யாது நோக் காதே, யினிய தன்பா லேயிருந்த வென்னைப் பாவிப் பதியோகம். 33

பங்கயந் தலைக்கு மேலே பன்னிரு விரலிற் கற்பித், தங்கதற் கறமென் மூல மறிவது நாள மாகுந், தங்கிடுஞ் செல்வ மெட்டுத் தளநிறந் தவள் மாகு, மிங்குதன் வலிவை ராக்ய மெனப்படு தாதி தன்கண். 34

சகலசத் தியுமு டைத்தாய்த் தமனிய மய மாய்த் தாரம், புகலுமெய்ப் பொருளா யென்றும் பொன்றுரு தாகி யெங்குந், திகழொளித் திரளா யுள்ள தெய்வமாய்த் தெரிக்கொ ணுதாய், நிகழுதற் பரத்தி னேரே நித்தலு நெஞ்சை வைப்பான். 35

மிக்கபரஞ் சுடரான விமலனையும் விளம் புற்ற, வக்கமலத் தேதனையு மயலாகா வகை நினைவா, னக்கரமாம் பரமாகா சத்துவனைத் தானென்கு, மொக்கநினைந் தேபின்னை யொன் றுநினை யாதொழிவான். 36

யாவரு மறிவரி தாய பாவனை
மேவுற விளம்பினன் வேறு மின்னமோர்
பாவனை கேண்மின்முன் பன்னு பங்கயப்
பூவினை யுன்னியப் பூவி னுள்ளதாம். 37

அந்நிய மறவந லோனைக் காட்டிய
பன்னிய புருடனும் பஞ்ச விஞ்சகன்
றன்னையே சகலகத் தாவாத் தன்னுரு
வன்னியின் சிகையதா மதித்து நோக்குவான்.

அவமறு புருடன்ற னகமுற வறநன்றாச், சிவமம லமதாகித் திகழ்தரு பரமாந்மா, வுவமையில் பரனாமென் னுரையினி லுணருந்தத், துவநிலை குலையாவச் சுதமென மநம்வைப்பான். 39

அப்பர மாந்மா வுள்ளே யதனுக்கா தாரமாகி, நிற்பதாய்ப் பரம மாகி நிரஞ்சந மாகி யுள்ள, வொப்பரு மகேச னேக வுருவனா யுன்னி யந்தத், தற்பரந் தன்னோ டொன்றுந் தன்மைய னாகிச் சார்வான். 40

சொன்னதத் துவங்க ளெல்லாஞ் சோதனை பண்ணிப் பின்னைப், பிந்நதத் துவமொன் றில்லாப் பிரமநா னெனநி னைந்து, பன்னரு மோங்கா ரத்தாற் பரமமாம் பரமா. யுள்ள,

வென்னிலே தன்னை வைத்திங் கென்மய மாகி யுள்ளான். 41

நலங்கொள் ஞாநநீ ராடிநல் லாகுதி
துலங்கு நீற்றையுத் தூளித்து மந்திர
மிலங்கு மங்கிமு தனிநைந் தீசனைப்
புலங்கொள் சோதியின் புஞ்சமா யுன்னுவான்.

ஆசிரம மேலிலதி யாசிரம மாகத்
தேசுதரு மாமறையி னீறுக டெரிந்தே
பாசுபத யோகுபசு பாசமற நேரே
பேசினனி தாருமறி யப்பெறும தன்றால். 43

பிறிதறு மெனதுசா யுச்சம் பேறதா
மறைபொருள் கேவலம் வழங்கி டாரிது
வறமுய லந்தணர் தம்மி லன்பரிற்
றறவுறு பிரமசா ரிகட்குஞ் சொல்லலாம். 44

பரியும கிஞ்சைப் பழிதீர் பிரம
சரியந்த வந்தரு சந்தோட முண்மை
யுரியபொ றைதூய்மை யுண்டென்றி ருக்கை
யரியவி ரதத்துக் கங்கங்க ளாமால். 45

எண்ணிய விவற்றிலொன் றீந ஞனவன்
றண்ணிய ஞதலாற் ருன்ன ழுவிஞன் [யே
புண்ணிய வினையிஞேர் பொருந்த வென்னை
கண்ணிய விரதமெஞ் சாமற் கைக்கொள்வார்.

வசி விந்தவி யோகாலெ னையடைந்
தாசை கோபம்ப யமற்ற வான்மராய்ப்
பாச மற்றெனைப் பாவித்த பாவத்தா
லாசி லென்மய மாஞர நேகரால். 47

எப்படி யார்நினைந் தடைவ ரியானவர்க்
கப்படி யானிகழ்ந் திடுவ ஞதலா
லொப்பரு ஞானமெய் யோகு ளத்தெனைத்
தப்பரும் பூசனை செயவே தக்கதாம். 48

பொய்யில் பத்தி யாற்றுறவாற் போதம்
பொருந்தும் புந்தியிஞற், செய்யும் பூசை யே
பூசை செய்யுந் தொழில்க ளெல்லாம்விட்,
டய்யம் பண்ணி யுண்டொன்று மாசைப்
படாதா ரெனையடையு, முய்யும் பரிசு மறைந்த
பொரு ளுங்கட் கிரங்கி யுரைத்தன ஞல். 49

பத்தியையென் பாலுடையா னெவ்வுயிர்க்
கும் பரிவுடையா, ஞெத்தநலந் தீங்கடையா
ஞெடுங்கியவுள் ளமதுடையான், புத்திமந
மென்பாலே பொருந்தியபா வனையுடையா,
னெத்தனையும் பொறையுடையா னியாவரினு
மெனக்கினியான். 50

பன்னியயோ கொழிவில்லான் பற்றிலான்
பாவகத்தோ,ரின்னலிலா ஞரம்பித் திடுவதூஉ
மொழிவதிலான், றன்னைவெரு வுதலொன்
ருற் ருன்வெருவ ருனில்லா, னென்னதியா
னெனவில்லா னென்றுமெ னக்கினியான். 51

துயரு ருதசந் தோட மேவியே
செயலெ லாமுதா சீந ஞகியே
யயல ராயிஞ ரன்ப ரின்றிவா
ழியல்பி ஞனெனக் கினிய ஞயிஞன். 52

துதியி னிந்தையிற் றுல்லிய ஞயெனிற்
றிதிய டைந்துசி னஞ்செருக் கின்றியே
மதியி னென்றினும் வாஞ்சையு ருதள
வதிக வானெனக் கென்றுமெய் யன்பிஞன்.

வாடலின் முகமது மலர்ச்சியு மவுநசற்
பீடுறு வித்தகம் பெற்ற தோடலங்
கூடுத லினியவை கூறலி யாவரு
நாடரு நிலையுடை யவர்க்கு நல்லனுன். 54

எத்தொழில்க ளுஞ்செயினு மென்னருளி
ஞலென், பத்தர்பா மப்பதம டைந்திடுவ
ராலே, தத்துவமும் வைத்தெனிலெ னேச்
சரண மாக, நித்தமுநி ராசையைய டைந்து
நினை கிற்பார். 55

அடங்கு மனுய்ப் பயனென்றி லாசைப்
படாதா னளவற்ற, விடங்கொள் வினைகள்
செய்தாலும் வீடே யெய்து மாதலினு,
லுடம்பு காணு நல்யோகி யுண்டாம் வினையா
லொருகாலு, மிடும்பை யடையா னுசைப்பா
டில்லா னெனையே யடைந்திடுமால். 56

துற்றுவரு தொந்துவம யக்கவைது டைத்
துப், பெற்றதொட மைந்தெனருள் பேறுறநி
னைந்தே, யுற்றகரு மங்கள்வினை யென்ன

வுரை செய்யார், கற்றவர்கள் வீடதென
வேகருது கின்றார். 57

என்னை யேநினைந் தெனைப்பணிந் தெனை
யருச் சித்தென், றன்னை யேயறிந் தவனெனை
யன்றியே சாரான், பின்னி யாதுமப் பெருந்
தகை யிருந்திடந் தனிலென், சென்னி யாற்
சுமந் தவற்குவேண் டுவதுசெய் குவனால். 58

என்ப தத்தைவிட் டிதாதே வதைகளைக்
காமித், தின்பம் வேண்டுநர் தாமுமிங் கிதனை
யெய் துவரா, லன்பி னுலருண் மூர்த்திவேண்
டுநர்களு மவர்பாற், பின்பு வந்தெனை யறிந்து
நன் முத்தியே பெறுவார். 59

சாமவ ரெந்தக் கடவுள ருஞ்சா வில்லா
தென், றுமம தாமென் றென்னையொ ழிந்
தார் தமைவிட்டன், பாமக வாதிச் சுற்றமும்
விட்டென் பாலன்பா, யாமர ணுந்தத் தளவுமி
லிங்கத் தருச்சிப்பான். 60

எந்தப் பதமுங் காதலி லாதே லிங்கத்தே,
வந்திப் பவன்ஞா னத்மக மாகி மயலற்றோன்,

சிந்தைக் குளதா யெங்குந் தானுஞ் சிவலிங்க, மந்தச் செநநந் தனிலே யறிவா லடைகின் ருன். 61

பங்கமில் பத்தி யோடுமேற் றெவரும் பாவனை யாலிலிங் கத்தே,யிங்கெனை யிறைஞ்சி லின்ப மெயஞ் ஞாந மெங்குமா மிலிங்கமெய் துவரா, லங்கியிற் புனலி லம்பரந் தன்னி லருக்கனி லனிலனிந் துவினி, லிங்கிவை யிலிங்க மாரணு தியிலே யெனைநினைந் திறைஞ்சிடப் படுவான். 62

ஈதெ லாம்வெறும் லிங்கம யமதா
மீதெ லாமிலிங் கத்துளி ருப்பதா
மாத லாலந்த லிங்கமெங் கேயங்கே
காத லாற்றொழ வேகட ஞகுமால். 63

கருத்திலா மூடர் காட்டமா திகளிற் காண் பர்கற் றவர்களா காயத், தருக்கனிற் புனலிற் காண்பரா குதியி லருச்சனை செய்யுமந் தண ரவ், வெரிக்கணே காண்ப ரெங்குமாய் நின்ற வெனதுலிங் கத்தினை நேரே, யொருக்கிய

பரம யோகிக ளென்று மொழிவறக் காண்பர் தம் முளத்தே. 64

நீங்காத காதலினு னின்மலபோ தம்பயக்கு, மோங்கார மாதலினல் லுருத்திரியந் தானு தல், பாங்காக வத்தியந வானுகிப் பரித்த வுடல், போங்காலத் தளவுநிரந் தரயோகம் புரிந்திடுவான். 65

காமர மெங்குங் காமர கன்றூர் காசிக்கே, யாமர ணுந்தத் தளவுமி ருப்பா ரங்காவி, போமள வுற்றூர் போய்வர வுற்றூர் புறையற் றோர், காமரை வென்றூர் தாமரை வென்றூர் கழல்கண்டே. 66

பொல்லா தவரு மங்காவி போகி லென்னை விடப்போகார், நல்லா ரென்னை யடைவரென நவில வேண்டு வதுமுண்டோ, வெல்லா வுயிர்க்கும் வீடளிப்ப னென்றூல் வினையா லிரங்காத, வல்லா வகைகூ டினுமுயிர்விட் டகல்வா னல்ல னறிவுடையான். 67

அரிய மறையி லரியமறை யாகும் பொருளீ தறிஞர்களாற், றெரிய நினைந்த படியெவர்க் குஞ் செப்பப் படாது செய்தவத்தா, லுரிய விரத னுயறமற் றொடுங்கு முள்ளத் தொடு பிரம, சரிய முடைய பத்தனுக்கு நேரே சாற்றத் தகுவதுவாம். 68

இவணமே தனதி யோக மியம்பித்தன் னிடத்தி ருந்த, வுவணகே தனனை நோக்கி யுத்தமர்க் குரைத்த யோக, மிவணுரை செய் யத் தக்க திலங்கிய சாந்தி நெஞ்சிற், சிவணிய புதல்வர்க் கென்றே சிவனருள் செய்ய லுற் றான். 69

முனிவரே யுங்கட் கெல்லா மொழிந்திடப் பட்ட ஞானம், புனிதராய்ப் புதல்வர்க் காகப் பூசுர ரானோர் கேட்ப, வினியநம் வாயி னலே யிப்படி யிறப்பு மீண்டு, செநியமு மொழிய நீருஞ் செப்புமென் றருளிச் செய் தான். 70

இந்த நாரண னீச னாகிய வென்னில் வேறல னென்றுதஞ், சிந்தை யானினை வார்க ளுக்குரை செய்த யோகிது செப்பலா, மெந்த வாருயிர் கட்கு மின்னுயி ராகு நாரண னென்பதோ, ரந்த மாதியி லாவெ னக்கரு ளான தோர்வடி வாகுமால். 71

ஏதமுற நாரணனை யென்னிலயல் காணும்
பேதவிழி யாளர்பிற விப்பிணிய ருரே
மாதவனை யானெனம நத்தினினை கிற்கும்
போதவிழி யாளர்பரி பூரணம டைந்தார். 72

ஆதலில ருச்சிமினிவ் வாதியரி யானுய்க், காதலொடு காண்மின்மய லாகியயல் காண் பார், தீதுதரு மாநரகு சேர்வுறுவர் தீதா, நீதி யுறு நீசரிடை யானும்வெளி நில்லேன். 73

நான்மறை யந்தணர் நாய்வதை செய்தத
னூன்மிசை கின்றவ ரோதினர் மூடப்
பான்மைய ரும்மரி யைப்பழி யாதம்
மேன்மைசெய் பத்தரை வீடுற விப்பன். 74

மருவற் கென்னை மநம்வைத்தோன் மாலா மிவனென் வடிவென்றே, பாவிப் பணிவா னென்றேசெம் பவளத் திருவாய் மலர்ந்தருளி, யாவிற் றயிலச் சுதனைக பழுந்தத் தழுவ வவ் விடத்தே, காவுற் றருள வதிசயமாய்க் கண் டார்மேனி கண்டிலரால். 75

தன்ப ராபர மாகிய வடிவினைத் தவிர்ந் தொரு தவனுகி, முன்பு தோன்றிய வடிவ தாய் முகுந்தனு முநிவரை முகநோக்கித், துன்ப வேரற வருளினு லுமக்கிறை சொன் னவிச் சுடர்ஞாந, மன்ப ராயற மறிபுதல் வர்க்கறி வியுமென வருள்செய்தான். 76

ஈசன தாய வந்த திலங்கிய பரம ஞாந, மாசி லந் தணனு மாகி * யாகித வநல னுகி, நேசனு யடங்கி யுள்ள நெஞ்சனு நிமலனுக்குப்,பேசலா மென் றுகண்ணன்பின்னருமருளிச்செய்தான்.

யோகிக ளியாவ ருக்கு முத்தம யோகி தானே, யாகிய முகுந்த னிவ்வா றருளியங் கவரை நீங்க, வேகவீ சனையு நாரா யணனையு மிறைஞ்சி யெல்லா, மோகவே தனையு மாறி முனிவர்முற் பதிய டைந்தார். 78

சனற்கு மாரன்சம் வத்தகற் குரைத்தனன் சநந்தனன் புலகற்குப், புனிற்றி தீர்முநி கௌ தமன் பொருட்டிது புகன் றனன் புகன்ருனிங், கநித்த மற்றுள விதுபாத் துவாசனுக் கங் கிரா வளித்தானேர், செகிப்பி லாவிது கபி லமா முநிபஞ்ச சிகற்குரைத் தனன்முன்னே.

எந்தை யாகிய பராசரன் சநகனு விலங் கிடப் பெற்றுனென், றந்தை பாலருந் தவஞ்

---

*ஆகித அநலன்-அக்கினிகோத்திர முள்ளவன்.

தீதின் முத்தியைச் சேரவேண் டினர்சிவ
னடிக்கே, யாதி லர்ச்சனை செய்தன ரந்தவெல்
லையிலாப், போத முற்றநற் கருமயோ கினைப்
புதல் வர்களா, யாத ரிப்பவர்க் குரைமினென்
றருண்முநி பணித்தான். 85

மாமறையின் மெய்ப்பொருளை மாலொடுச
நற்கு மாரன்முத லார்க்கிறைவ ழங்குதிரு
வார்த்தை, யாமைவடி வைக்கொடரி யமுத
மத நத்தன் றருமுநிவர் கட்கருளு மறிவதனை
யன்பாற், ருமதமில் சௌநகனை யாதிமுநி
வர்க்குத் தந்தருளு கென்று தலை யாலு றவணங்
கித், தோமின்முநி சூதனுரை செய்யவவர் கட்
குச் சுருதிகடெ ரிந்தமுநி சொன்னபரிசிதால்.

மூவர் தேடிறைச நற்கு மாரன்முதன் முநி
வர் கட்குமொழி கீதையிங், கியாவ ரோதினரி
தன்பொ ருட்டுணிவ ரியாவர் கேட்பவரி யாவர்
தம்,பாவம் வேரொடுபெ றிந்து நல்லபரமப்பதம்
பெறுவ ராதலான், மேவு மன்பினொடு மோத
மீளுதலில் வீடு வேண்டினன்வி ரும்புவான்.

11. யோக அத்தியாயம் முற்றுப் பெற்றது.

ஆக விருத்தம்-338.

சிவப்பிரகாசம் என்னும்
ஈஸ்வர கீதை முற்றுப் பெற்றது.

சர்வஞ் சின்மயம்.

ஸ்ரீகாசிகாநந்த ஸ்வாமிகள் இயற்றிய நூல்கள்.

அச்சியற்றத் தயாராயிருக்கும் நூல்கள்.

வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா
(வேதாந்த அகராதி)

யுக்திப் பிரகாசம்

வேதாந்த சித்தாந்த முக்தாவளி

ஹரிமீடை-அரிதத்துவ முக்தாவளி

வேதாந்த பரிபாஷை

தர்க்க சங்கிரம்-அன்னம் பட்டீயம்

ஈசாவாஸ்யோபநிஷத் பாஷ்யம்

பஞ்சதசி-வசனம்

வேதாந்த சூளாமணி உரை

கீதாசார உரை

சிவஞ்ன போத உரை

மஹாராஜ துறவு உரை

பிரஹ்ம கீதை உரை

மஹாத்ம சரிதாமிர்தம்

விவேக சூடாமணி வசனம்.

PRENTED, AT THE NOBLE PRESS, MADRAS.